# உயிரின் விலை பத்து கோடி

## 1

'வாழ்க்கை என்பது சிலருக்கு வரம். சிலருக்கு ஜுரம். இரண்டுக்குமே காரணம் அவரவர் முன் கர்ம வினை. உடம்போடு ஒட்டிய நிழல் போல கூடவே வருவதுதான் கர்ம வினை. அதற்கேற்பவே எல்லாம் நிகழும். எல்லா தகுதிகளும் இருந்து ஒருவர் கஷ்டப்பட காரணமும் கர்மம் தான். ஒரு தகுதியும் இல்லாமல் சுகமாய் வாழ காரணமும் கர்மம் தான்.

இதில் இருந்தே விதி பிறந்தது.

இந்த விதியை மாற்ற மதியால் முடியுமா?'

**திருநீர் மலைக் கோவில்!**

காரில் தன் மனைவி ஜானகியுடன் வந்து இறங்கிய ரத்தினம் நிமிர்ந்து மலையில் தெரிந்த கோவில் கோபுரத்தை பார்த்தார். திரும்பி

மனைவியை பார்த்தபோது அவள் முகத்தில் அப்படி ஒரு சோகம்.

இருவருமே மெல்ல நடந்து மலை ஏறத் தொடங்கினர். அடிவாரத் தொடக்கத்தில் தேங்காய் பழக்கடை போட்டு அமர்ந்திருந்தாள் பொன்னம்மாள் என்கிற கிழவி.

ரத்னத்தையும் ஜானகியையும் பார்க்கவும் "வந்துட்டீங்களா எங்க காணமேன்னு நினைச்சேன்" என்றபடியே அர்ச்சனைக்கான தேங்காய் பழத் தட்டை எடுத்து அவர்கள் முன்னால் நீட்டினாள்.

மிக நிதானமாக சோகம் குறையாத முகத்தோடு ஜானகியும் அதை வாங்கிக் கொண்டாள்.

"பிள்ளையை பத்தி ஏதாவது தெரிஞ்சிச்சா?" என்று அவள் அடுத்த கேள்வி கேட்கவும் ஜானகியின் கண்களில் இருந்து பொல பொல வென்று கண்ணீர் கொட்டத் தொடங்கியது.

"ஐயோ தாயி... நான் தெரியாம கேட்டுட்டேன் என்னை தப்பா எடுத்துக்காதம்மா" என்று சமாளிக்கவும் முயன்றாள்.

ரத்தினம் மட்டும் விரக்தியாக "அது போனது போனது தான் பாட்டி. இனி அது கிடைக்கும்கற நம்பிக்கை எனக்கு இல்லை" என்றார்.

"அப்படி எல்லாம் சொல்லாதாப்பா... நீயும் அமாவாசை தவறாம இந்த மலைக்கு வர்றே... அப்ப உனக்கு உன் குழந்தை நிச்சயம் கிடைச்சாகணும்கறது தான் விதி...." என்றாள் நம்பிக்கையான குரலில்....



"ஹூம்... நீயும் நாலு வருஷமா இதையே தான் சொல்றே... ஆனா போலீஸ்காரங்களும் சரி என்னோட ஆட்களும் சரி இதுவரை குழந்தை இருக்கற திசையை கூட கண்டு பிடிக்கலேங்கறது தான் உண்மை. நானும் வெறுத்துப் போய் இந்த கோவிலுக்கு இனி வரக்கூடாதுங்கற எண்ணத்தில தான் ஒருவாரமா இருந்தேன். ஆனா ஜானகி தான் இந்த அமாவாசைக்கு வந்தா 48 தடவை முடியுது.... 47 தடவை வந்துட்டோம் இன்னும் ஒரே ஒரு தடவைன்னு போயிட்டு வந்துடுவோம்னா, அதுக்காக தான் வந்திருக்கேன்" என்று கூறியவர் அதற்கு மேல் நிற்கப் பிடிக்காமல் ஜானகியையும் இழுத்துக் கொண்டு மலை மேல் ஏறத் தொடங்கினார்.

கிழவி அந்த காட்சியை பெருமூச்சோடு பார்த்தாள். அப்படியே அவள் நினைப்பும் நான்கு வருடங்களுக்குப் பின்னால் சென்றது.

பிறந்து ஒருவருடம் ஆன நிலையில் முடி இறக்கி காது குத்துவதற்காக ரத்னமும் ஜானகியும் குழந்தையோடு இதே மலைக்கு வந்த போது தான் நடக்கக் கூடாத அந்த சம்பவம் நடை பெற்றது.

முடி இறக்கி காது குத்தி முடித்த நிலையில் பெருமாளுக்கு திருமஞ்சனம் என்னும் அபிஷேகம் செய்து திருப்தியாக வணங்கி விட்டு கீழே இறங்கி வந்தனர் இருவரும். பொன்னம்மாள் தான் பூஜைக்கான பொருட்களை தந்திருந்தாள். அவளுக்கான பணத்தை தந்து விட்டு அங்கு இருக்கும் பிச்சைக்காரர்களுக்கும் தலைக்கு நூறு ரூபாய் தரச் சொல்லி பொன்னம்மாளிடமே ரத்னம் பணத்தை தந்தார்.

அவளோ "உங்க கையாலயே கொடுங்க சாமி... அப்பதான் புண்ணியம்" என்றாள். அப்போது குழந்தை சிணுங்கி அழவும் ஜானகி அருகில் இருந்த காரில் போய் ஏறி அமர்ந்து கொண்டாள். ரத்னமும் வரிசையாக எதிரில் நின்ற அவ்வளவு கையின் மேலும் ஒரு நூறு ரூபாயை வைத்தபடி இருந்தார்.

"நீயே கொடுத்தா எப்படி? உன் பொஞ்சாதிய கூப்பிட்டு அவ கையாலயும் கொடுக்கச் சொல்லு" என்றாள் பொன்னம்மாள். ரத்னமும் அங்கு நின்றபடியே ஜானகியை அழைத்தார். முதலில் வர மறுத்தவள் பின் குழந்தையை பின் சீட்டில் ஒரு டவலை விரித்து விட்டு விட்டு வந்து அவரோடு சேர்ந்து கொண்டு பலருக்கும் பணத்தை தந்தாள். அவர்கள் எதிரில் ஒரு கூட்டமே முண்டி மோதிக் கொண்டது. பிச்சைக் காரர்கள் என்றில்லாமல் மலைக்கு சாமி கும்பிட வந்தர்களும் இடையில் புகுந்து கை நீட்டினர். பணம் தீரும் வரை கொடுத்து விட்டு 'அவ்வளவுதான் அவ்வளவு தான்' என்று கைகளை தட்டிக் கொண்டு இருவரும் காரை நெருங்கவும் பகீர் என்றது.

காருக்குள் பின் சீட்டில் விடப்பட்டிருந்த குழந்தையை காணவில்லை. பதறிப் போனாள் ஜானகி. காரை விட்டு இறங்கி நாலாபுறமும் ஓடி ஓடித் தேடியும் அதன்பின் குழந்தை கிடைக்கவே யில்லை.

தர்மம் செய்ததற்கு தண்டனை போல் அமைந்து விட்டது அந்த சம்பவம். அன்று அவர்கள் மட்டுமல்ல பொன்னம்மாளும் தேடினாள். பிறகு வெகு தாமதமாக ஒரு தகவல் தெரிய வந்தது. அங்கு பிச்சை



எடுப்பவர்களில் ஒருவன் வட நாட்டை சேர்ந்தவன். பிச்சை எடுப்பது போல நடமாடி குழந்தைகளை கடத்தி விற்றுவிடுபவன் என்று....!

ஆனால் அவனையும் சரி, குழந்தையையும் சரி போலீசால் எவ்வளவு முயன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. தனிப்பட்ட முறையில் பல லட்சங்களை செலவழித்து ரத்னமும் முயற்சி செய்தார். அப்படி செய்ததில் அந்த பிச்சைக்காரன் எலெக்ட்ரிக் ட்ரெயினில் அடிபட்டு செத்து விட்ட விஷயம்தான் தெரிய வந்தது. குழந்தை பற்றிய தகவல் இந்த நொடி வரை தெரியவில்லை. அதன்பின் பார்க்காத ஜோதிடர்கள் இல்லை. மந்திரவாதிகளும் இல்லை. எல்லோரும் குழந்தை உயிருடன் தான் உள்ளது. நல்லபடியாகவும் உள்ளது என்றார்கள். ஆனால் எங்கே இருக்கிறது என்று மட்டும் அவர்களால் கூற முடியவில்லை.

ஒரு மலை சன்னியாசி மட்டும் குழந்தை திரும்பக் கிடைக்கும். ஆனால் நீ 48 அமாவாசைக்கு அந்த மலைக் கோவிலுக்கு சென்று குழந்தை பெயருக்கு அர்ச்சனை செய்ய வேண்டும் என்றார்.

அவர் அப்படி பல பேருக்கு சொல்லி சொன்ன அவ்வளவு விஷயங்களும் பலித்திருப்பதால் ரத்னமும் அதை நம்பி அந்த மலைக்கு 48 முறையும் வந்து விட்டார்.

இனி என்னாகும் என்பது போகப்போகத் தான் தெரியும்!

பெருமாளுக்கு கற்பூர தீபம் காட்டி விட்டு துளசித் தட்டுடன் ரத்னம், ஜானகியிடம் வந்தார்

பட்டர். ஜானகி கண்ணீர் மல்க கைகளால் அந்த தீபச் சுடரை ஒத்திக் கொண்டாள்.

பல வருடங்களாக வருவதால் அவர்களை பட்டருக்கு நன்றாக தெரிந்திருந்தது.

"கவலை படாதீங்கம்மா - உங்க கண்ணீர் வீண் போகாது - பெருமாள் கை விட மாட்டார்" என்றார் பட்டர்.

"என்னமோ சாமி... இது தான் கடைசி தடவைன்னு வந்திருக்கேன். எனக்கு மட்டும் குழந்தை கிடைக்கலைன்னா சத்யமா கடவுளே இல்லேங்கறது தான் உண்மை" - என்று விரக்தியோடு பேசின ரத்னம் அதற்கு மேல் சன்னதியில் நிற்கப் பிடிக்காமல் அங்கிருந்து விலகினார். ஜானகியும் மௌனமாக பின் தொடர்ந்தாள்.

படிகளில் இறங்கி நடக்கும் போது அவள் நடையில் உயிரே இல்லை. படிகளில் அங்கங்கே பிச்சைக்காரர்கள். அதில் ஒருத்தி ஒரு 5 வயது குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு பிச்சை எடுத்தபடி இருந்தாள்.

அந்த குழந்தையை பார்க்கவும் ஜானகிக்கு தன் தொலைந்த பிள்ளை ஞாபகம் தான் வந்தது. முகச் சாயலும் ஓரளவுக்கு பொருந்திப் போனது.

அப்படியே நின்று விட்டாள்

ரத்னத்துக்கும் புரிந்து விட்டது.

"என்னம்மா இந்த புள்ளைய பாக்கவும் நம்ம புள்ள ஞாபகம் வந்துடிச்சா?"



"ஆமாம்- உங்களுக்கு வரலையா?"

"அது எப்படி வராமல் போகும். 5 வயசுல யாரைப் பாத்தாலும் நம்ம பிள்ளை நினைப்பு தான் எனக்கு..."

இருவரும் பேசும் போது அந்த குழந்தை பிச்சைக்காக கை நீட்டியது. ரத்னம் நூறு ரூபாயை தந்தார். பிச்சைக்காரி பரவசமாகி விட்டாள்.

"சாமி நீங்க பேசிட்டிருந்தது காதுல விழுந்திச்சு. வேணும்னா இவன கூட்டிகிட்டு போங்க.... என் கிட்ட இருந்து சீரழியறதுக்கு இவன் உங்க கூட வந்தா நல்லா இருப்பான்னா ஒரு தாயா எனக்கும் அது தானே வேணும்?" - என்று கேட்டாள்.

அவள் பதில் ஜானகிக்கு சிலிர்ப்பை உண்டு பண்ணியது. ஓடிப் போய் பிள்ளையை தூக்க ஆசையும் கொண்டாள். ஆனால் ரத்னம் பார்வையாலேயே தடுத்தார். பேசாமல் வா என்பது போல இறங்கி நடந்தார். அந்த பிச்சைக்காரிக்கு ஏமாற்றமாகி விட்டது. இருவரும் அடிவாரத்தை அடைந்து காரை நெருங்கிய போது ஒரு குரல்!

அழைத்தது ஒரு பெரியவர்! நெற்றியில் பெரிதாக நாமம்! ரத்னம் மட்டும் அவரிடம் சென்றார்.

"நீ ரத்னா ஜுவல்லரி ரத்னம் தானே?"

"ஆமாம்.... நீங்க....?"

"நான் யாரா இருந்த என்ன... உன்னை பத்தி நான் நிறைய கேள்வி பட்டிருக்கேன். குழந்தை கூட தொலைஞ்சு போயிடிச்சு இல்ல?"

“ஆமாம்.... நீங்க யாருன்னு சொல்லலையே...”

“அதெல்லாம் எதுக்கு? உனக்கு இன்னும் உன் குழந்தை கிடைக்கும்கற நம்பிக்கை இருக்கா...?”

“என்ன அப்படி கேட்டுட்டீங்க. அந்த நம்பிக்கை நான் சாகற வரை போகாதுங்க.”

“ரொம்ப சந்தோஷம். உனக்கு நான் ஒரு உதவி செய்ய விரும்பறேன். கேட்பியா...?”

“தாராளமா.... சொல்லுங்க...”

“நீ கோயமுத்தூர் வெள்ளியங்கிரி மலைக்கு போயிருக்கியா?”

“இல்லை”

“நாளைக்கும் அமாவாசை இருக்கு. அமா வாசைக்கு அமாவாசை அந்த மலைல பால் சுனைங்கற இடத்துக்கு பகவதியோகின்னு ஒருத்தர் வருவார். அவர் கிட்ட ஒரு ஸ்படிக லிங்கம் இருக்கு. அதுக்கு சுனை தண்ணீரை கொண்டு அபிஷேகமும் செய்வார். அந்த அபிஷேகம் முடிஞ்சு விபூதி பிரசாதம் தரும் போது உன் குறையை அவர்கிட்ட சொல்லு. உன் குழந்தை இப்ப எங்க இருக்கு எப்பபடி இருக்கு எப்ப கிடைக்கும்கற எல்லா தகவலையும் சொல்லிடுவார்.”

- பெரியவர் கூறிவிட்டு மறுபதிலைச் கூட எதிர்பார்க்காமல் மலை ஏறத் தொடங்கினார்.

ரத்னத்திடம் யோசனை!



# 2

“கர்ம வினைகளை வெற்றி கொள்ள முதலில் அது எப்படிப்பட்டது என்று தெரிய வேண்டும். அதைத் தெரிந்து கொள்ள வழிகாட்டுவது தான் ஜாதகம். ஜாதகம் என்பது சாதாரண விஷயமல்ல. அது ஒரு காலப் புள்ளியின் விளைவு. அது ஒரு மகத்தான கணிதம். போடு எந்த கணக்கையும் பிழையில்லாமல் போடுவது கின்றவர்கள் கூட இந்த கணக்கை கடினம்!”

திரும்பி வந்த ரத்னம் காரில் ஏறி அமர்ந்தார். அவரையே பார்த்தபடி இருந்த ஜானகி “என்ன விவரம்?” என்று கேட்டாள்.

அவரிடம் மௌனத்தின் நீட்சி, “என்னங்க சொன்னார் அந்த பெரியவர்..” மண்ணாங்கட்டி. ஏன் தான் கோவிலுக்கு வந்தோமோன்னு கோபமா வருது ஜானகி.”

“நீங்க விஷயத்தை சொல்லுங்க.”

“வெள்ளையங்கிரி மலையில ஒரு சித்தர் இன்னிக்கு ராத்திரி பூஜை பண்ண வருவாராம். அவர் பண்ற பூஜையை பாக்க கொடுத்து வெச்சிருக்கணு மாம். அப்புறமா அவர்கிட்ட நம்ம குறையை சொன்னா அவர் நமக்கு தெளிவா பதில் கூறிடு வாராம்...”

- ரத்னம் குரலில் கொஞ்சம் அவநம்பிக்கை யோடு கிண்டலும் தொனித்தது.

"அப்ப போய் பாக்கலாங்களா?"

"உன்னை அப்படியே கொன்னே போட்டுடுவேன்"

"முதல்ல அதை செய்யுங்க, இப்படி உசுரோட இருக்கிறதுக்கு உங்க கையால சாகறது எவ்வளவோ மேல் எனக்கு..."

"போதும் ஜானகி நான் பேசினதை வெச்சே என்னை மடக்காதே"

"என்னங்க பின்ன... சாமி கும்பிட்டுட்டு வரோம். ஒருத்தர் கூப்பிட்டு வழி காட்றாரு. அதை பிடிச்சுக்காம விரக்தியா பேசினா எப்படிங்க..?"

'இதோ பார்.... இந்த நாலு வருஷத்துல நாம பாக்காத ஜோசியரோ மந்திரவாதியோ உண்டா?'

"அப்படி இல்லைங்க... இவங்கள எல்லாம் நாமதான் தேடிப் போய் பார்த்தோம். ஆனா இப்ப நம்மளை தேடி ஒரு பதில் வந்திருக்கிறதால எனக்குள்ள ஒரு நம்பிக்கை."

"உன்னை திருத்த முடியாது ஜானகி."

"நான் இப்படியே இருந்துட்டு போறேங்க... எனக்கு பிள்ளை கிடைச்சா போதும்.."

- ஜானகியின் பாசத்திடம் ரத்னத்தால் ஏதும் செய்ய இயலவில்லை. டிரைவரிடம் காரை கோயமுத்தூர் நோக்கி விடச் சொன்னார்!

❑❑❑



பள்ளிக்கு தயாராகிக் கொண்டிருந்தான். மகேந்திரன்! யூனிஃபார்ம், ஷூ, நேம் பேட்ஜ் என்று பார்த்துப் பார்த்து அணிவித்து அவனோடு ஓடியாடிக் கொண்டிருந்தாள் மாதவி. அவளது சுறுசுறுப்பும் மகேந்திரனின் விளையாட்டுத் தனமும் பார்க்கவே வேடிக்கையாக இருந்தது.

பிரீஃப்கேசும் கையுமாக மாடிப்படியில் இறங்கியபடி இருந்த விஷ்வநாத்தும் அந்த காட்சியை வெகுவாக ரசித்துக் கொண்டே இறங்கி வந்தான். யூனிஃபார்ம் விஷயம் முடிந்து அடுத்து டிபன்... அவள் ஊட்டிவிட்டிருந்த இட்லியை வாயிலேயே அடக்கிக் கொண்டு அதை விழுங்கி விடாமல் அழிச்சாட்டியம் செய்யும் மகேந்திரனை விஷ்வநாத் புன்னகையோடு பார்த்தான்.

"ஆமா அவனை பார்த்து சிரிங்க.. இரண்டு இட்லி திங்க என்ன பாடுபடுத்தறான் தெரியுமா?" என்று அவள் சடைத்துக் கொண்டாள்.

"அவனுக்கு அப்ப இட்லி பிடிக்கலைன்னு அர்த்தம். நீ வேற பிடிக்கற டிபனை பண்ணிக் கொடு"

"எதையும் வேண்டாங்கறான். எப்பப்பார் நூடுல்ஸ் தான் வேணும்கறான். ஆனா நூடுல்ஸ் சாப்ட்டா உடம்பு போயிடும்னு எல்லாரும் பேசிக்கறாங்க."

"எனக்கு தெரியாது நீயாச்சு உன் பிள்ளையாச்சு" என்று கூறிய விஷ்வநாத் எதிரில் அவர் கார் டிரைவர் வந்து பிரிஃப் கேசை வாங்கிக் கொண்டான்.

"சரிப்பா நான் ஃபேக்டரிக்கு போய்ட்டு வந்துடறேன்" என்று புறப்பட்டான் விஷ்வநாத். அவன்

விலகவும் மாடியில் இருந்து அடுத்து இறங்கிய நபர் மாதவியின் அண்ணன் ராம்குமார்.

ரிடையர்ட் மிலிட்டரி மேஜர்!

திருமணமே செய்து கொள்ளாத கட்டை பிரம்மச்சாரி. அவனுக்கும் மாதவி மகேந்திரனோடு போராடுவது வேடிக்கையாக இருந்தது. உள்மனதில் 'கடவுளே உனக்கு கோடானு கோடி நன்றிகள்' என்றும் கூறிக் கொண்டான். அப்படியே தினசரி டென்னிஸ் கோர்ட்டுக்கு போவது போல அன்றும் தயாரானான். அப்போது தொலைபேசி அழைப்பு.

"என்ன ராம்குமார் புறப்பட்டுட்டீங்களா?"

"புறப்பட்டுகிட்டே இருக்கேன்.. நீங்க.."

"நான் யாரா இருந்தா என்ன.. ஆமா ஒரு மேஜரா இருந்துகிட்டு ஒரு குழந்தையை நீங்க திருடினது கொஞ்சமாவது சரியா?"

போனில் எழும்பிய கேள்வி ராம்குமாரை அப்படியே ஸ்தம்பிக்க வைத்துவிட்டது. அவள் எதிரில் அவர் ஸ்தம்பிப்பை கவனிக்காமல் மாதவி மகேந்திரனுடன் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தாள்!

"ஏய் யார் நீ என்ன உளற்றே?"

"உளற்றேனா.. நானா..?"

"ஸ்டுப்பிட் போனை வைடா..."

"என்னது.. போனை வைக்கறதா? ஹலோ மிஸ்டர் மேஜர் நான் பிறவியிலேயே கிரிமினல். என்கிட்ட உங்க மிரட்டல்லாம் பலிக்காது."

"ஏய் இப்ப நீ போனை வைக்கமாட்டே..?"



"சரி... உன் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து இப்ப வெச்சுட்டேன். ஒரு அரை மணி நேரம் கழிச்சு திரும்ப கூப்பிட்றேன்." போன் கட் ஆனது. ராம்குமார் முகமும் அனலில் வாட்டிய வாழைக்காய் போல ஆகிவிட்டது. அதை மாதவியும் கவனித்தாள்.

"அண்ணே.."

"என்ன மாதவி?"

"என்ன உடம்பு சரியில்லையா?"

"உடம்பு... உடம்பு... அதெல்லாம் ஒண்ணு மில்லம்மா.."

"ஏன் குரல் நடுங்குது - என்னண்ணே பண்ணுது."

"ஐயோ அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா - என்ன சொல்றான் உன் மகன்?"

"அதான் பாக்கிறயே - சாப்பிட இப்படியா ஒரு குழந்தை படுத்தும்.."

"இவன் இல்லம்மா.. இந்த காலத்து பசங்க அவ்வளவுமே இப்படிதானே இருக்காங்க.."

"நல்லா பசி எடுத்து சோறு சோறுன்னு கிடந்து அலையணும். அதுக்கு எதுவும் மருந்து இல்லை யாண்ணே?"

"அப்புறம் உனக்கு போட்டுக் கட்டுப்படி யாகாது.."

"என்ன பேசறீங்க நீங்க? ஒரு நாளைக்கு ஆயிரத்து நூறுபேர் ஃபேக்டரில சாப்பிட்றாங்க... இந்த சென்னைல இருக்கற ஃபேக்டரிகள்ளயே

இலவசமா சாப்பாடு போட்ற ஒரே ஃபேக்டரி நம்ம ஃபேக்டரிதான். அவ்வளவு பேருக்கு போட்ற என்னால இவனுக்கா போட முடியாது?"

மாதவிக்கு கோபம் வந்து விட்டது. ராம்குமாரும் பதில் பேசவில்லை. மனது திரும்பப் போன் வருமோ, என்னும் எண்ணத்துக்குள் சிக்கிக் கொண்டு அலை பாயத் தொடங்கியது. அங்கே மாதவி எதிரில் இருந்தால் முகம் காட்டிக் கொடுத்துவிடும் பயத்தில் ராம்குமாரும் அங்கிருந்து விலகி மாடியில் உள்ள தன் அறை நோக்கி சென்றான். கதவையும் தாழிட்டுக் கொண்டான்.

'ஒரு மேஜரா இருந்துகிட்டு குழந்தையை நீங்க திருடினது கொஞ்சமாவது சரியா?' என்று போனில் கேட்ட கேள்வி திரும்ப காதுகளில் ஒலிக்கத் தொடங்கியது.

தான் குழந்தையை ஒருவன் மூலம் திருடி வந்தது தனக்கும் விஷ்வநாத்துக்கு மட்டுமே தெரிந்த ஒரு ரகசியம்! இத்தனை வருஷத்தில் அது ஒருவருக்கு கூட தெரிந்ததில்லை. அதைப் பற்றி நினைத்தால் தானே பேசுவதற்கு..? பேசினால் தானே வெளியே தெரிவதற்கு? இது எப்படி ஒருவனுக்கு மட்டும் தெரிந்திருக்கிறது..?

ராம்குமாருக்குள் கேள்விக் குதிரைகள் இங்கும் அங்கும் ஓடத் தொடங்கின. நெஞ்சம் அதிகபட்சமாக திக்திக் சப்தம் போட்டது. காதோரமாகவும் ஸ்ப்ரே செய்த மாதிரி வியர்த்தது.

துல்லியமாக செல்போனும் கூப்பிட்டது.



எடுப்பதற்கு கைகள் நடுங்கின!

அடித்து ஓயட்டும் என்று விட்டு விட்டு அறையில் இருந்த படுக்கையில் விழுந்த போது படுக்கை முள்ளாக குத்தியது. செல்போனும் அடித்து முடித்து அடங்கியது. ஆனால் மனது விழித்துக் கொண்டது!

□□□

**மா**தவியை காதலித்து திருமணம் செய்து கொண்டிருந்தான் விஷ்வநாத்!

கல்லூரியிலேயே காதல் அரும்பி விட்டது.. விஷ்வநாத் தமிழ்நாட்டின் முதல் பத்து பணக்காரர்களில் ஒருவரின் பிள்ளை. எனவே அவனுக்கு பெண் கொடுக்க மற்ற பணக்காரர்கள் வரிசையில் நின்றபடி இருந்தார்கள். ஆனால் காதல் என்னும் உணர்வு விஷ்வநாத்தை மாதவியிடம் நன்றாக கவிழ்த்து விட்டது.

இந்த காதலுக்கு மாதவி தரப்பில் எதிர்ப்பு காட்ட பெரிதாய் ஒருவருமில்லை. மாதவியின் அப்பா அம்மா என்று இருவரையும் ஒரு விபத்து ஒரு சேர அழைத்துக் கொண்டு விட்டது. இறுதியில் மிஞ்சியது அண்ணன் ராம்குமார்தான்!

மிலிட்டரியில் மேஜராக ராஜஸ்தான் பார்டரில் பணியாற்றிக் கொண்டிருந்தவன் மாதவிக்காக பணியை துறந்து விட்டு திரும்பி வந்தான். அவள் காதலுக்கும் துணை நின்றான். ஆனால் விஷ்வநாத்தின் அப்பா தாமோதர் அவ்வளவு சுலபத்தில் சம்மதிக்கவில்லை. அவர் ராம்குமாரை தனியே

சந்தித்து ஒரு பெட்டி நிறைய பணம் தந்து ஊரை விட்டே ஓடிவிட வெல்லாம் சொல்லிப் பார்த்தார். ஆனால் ராம்குமார் பணத்தையும் வாங்கவில்லை ஊரைவிட்டும் ஓடவில்லை.

யுத்த காலத்தில் எதிரிகள் முன்னால் துணி வோடு நின்றதைப் போலவே தாமோதர் முன்னாலும் நின்றான்.

"உங்க மகன் கிட்ட பேசி காதல்ல பின் வாங்கச் சொல்லுங்க. அவர் அப்படி பின்வாங்கிட்டா என் தங்கையும் பின் வாங்கிடுவா.." என்கிற பதிலை கம்பீரமாய் கூறினான். மாதவியும் அண்ணனிடம் உறுதியாக நின்றாள். ஒரு கட்டத்தில் விஷ்வநாத் தாமோதரிடம் உன் சொத்தே வேண்டாம் நான் என் சொந்த கால்களில் நின்று பிழைத்துக் கொள்கிறேன் என்று கூறிவிட்டு வந்து மாதவி கழுத்தில் ஒரு கோவி லில் வைத்து தாலி கட்டினான்.

ஒரு வழியாக அந்த மிகப் பெரிய மனிதனின் எதிர்ப்பை மீறி திருமணம் நடந்து முடிந்தது. ராம் குமார் - மாதவி திருமணத்தை மீடியாக்களும் பெரி தாக்கி விட்டன.

'பிரபல தொழிலதிபர் மகன் ரகசிய திருமணம்' என்றும் 'சொத்தைவிட காதலே பெரிது' என்றதை யும் கொட்டை எழுத்துக்களில் செய்தியாக போட்டு தமிழ்நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்து விட்டனர்.

ஒரே நாளில் மாதவி தமிழ்நாட்டில் அனை வருக்கும் தெரிந்த ஒரு பெண் ஆகிவிட்டாள்.



நித்யானந்தா விவகாரத்தில் ரஞ்சிதா கூட அந்த அளவு பிரபலம் ஆகவில்லை.

இறுதியில் தொழிலதிபர் தாமோதர் இறங்கி வந்தார்.

மகனின் காதலை ஏற்றுக் கொண்டார்.

பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

"என் மகன் காதல் உறுதியானது தானா என்று பரிசோதனை செய்தேன். பணக்காரர்களின் காதல் விலை போகக் கூடியது என்கிற கருத்தை என் மகன் உடைக்க வேண்டும் என்று விரும்பினேன். அவனும் அதை சாதித்து காட்டிவிட்டான். என்னுடைய வாரிசு அவன். என் தொழில் சாம்ராஜ்யத்தை அவன் தான் வழிநடத்தப் போகிறான். எனவே அவன் மன உறுதியையும் பரிசோதிக்க விரும்பியே காதலை எதிர்ப்பது போல நடித்தேன். இப்போது எல்லாமே சரியாகிவிட்டது" என்று அவர் பேட்டி தந்தார். அதை ஒரு பத்திரிகை கிண்டலடித்து கார்ட்டூனும் வெளி யிட்டது. அதாவது குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று அவர் கூறுவது போல கேலி செய்திருந்தது.

எப்படியோ ஒரு கோடீஸ்வரனின் காதல் இறுதியில் வெற்றிக் கோட்டை தொட்டு ஜெயித்து விட்டது. இதில் ராம்குமாருக்கும் மகிழ்ச்சி. ஆனால் காதல் வெற்றி என்பது வாழ்க்கை தோல்வியாக மாற ஆரம்பித்தது தான் வினோதம்.

திருமணம் முடிந்து மூன்று வருடங்களாகியும் குழந்தை உருவாகவில்லை. விஷ்வநாத்தும் மாதவியை

அழைத்துக் கொண்டு பரிசோதனைக்காக வெளிநாட்டிற்கு சென்றான். இங்கே பரிசோதனை செய்தால், ரிசல்ட் நெகடிவ் ஆக இருந்தால் எப்படியாவது வெளியில் கசிந்து விடும் என்பதால் தான் இந்த திட்டம்.

தாமோதரும் மாதவிக்கு குழந்தை உருவாகாததை கூர்ந்து கவனித்தபடி இருந்தார். காதலில் தோற்று விட்டவருக்கு குழந்தையின்மை கை கொடுக்கும் போல் தோன்றியது. எனவே ஒரு பிரைவேட் டிடெக்டிவை அணுகி இருவரையும் கண்காணிக்க வைத்தார். மகனும் மருமகளும் எந்த ஆஸ்பத்திரிக்கு சென்றாலும் பின்னாலேயே இந்த ஒற்றனும் சென்று விடுவான். இதை விஷ்வநாத்தும் மோப்பம் பிடித்து சுதாரித்துக் கொண்டான். உள்நாட்டில் பரிசோதனைக்கு இடமே கொடுக்கவில்லை.

வெளிநாட்டுக்கும் தொழில் நிமித்தமாக போன போது மாதவியை பின்னாலேயே வரவழைத்து லண்டனில் உள்ள ஒரு டாக்டரிடம் பரிசோதனை செய்து கொண்டான். அங்கே ஒரு பெரிய இடி அவன் தலைமேல் விழுந்தது. அதன்படி அவனால் பிள்ளை பெற முடியாது என்பது தான் இந்த இடி!

ஆனால் மாதவியிடம் எந்த குறையும் இல்லை.

டாக்டர் ஒரு வழியை பிறகு காட்டினார். டெஸ்ட் ட்யூப் முறையில் அவளை கருத்தரிக்க செய்யலாம் என்றார்.

அதன்பின்பு அப்படித்தான் நடந்தது.

மாதவிக்கே தெரியாமல் அவளுக்கு டெஸ்ட் ட்யூப் சோதனைகள் நடத்தப்பட்டன. அவள் கேட்ட



போது அவை சாதாரண பரிசோதனைகள் தான் என்று கூறப்பட்டன. ஆனாலும் அவளை ஏமாற்ற முடியவில்லை. இறுதியில் விஷ்வநாத்தின் இயலாமையை ஒப்புக் கொண்டு வேறுவழியின்றி சம்மதித்தாள்.

பின் மாதவியும் கருத்தரித்தாள். இதனால் மாதவிக்கு ஏற்பட்ட மகிழ்வை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அதே சமயம் அவள் உடம்பில் ஹீமோகுளோபின் குறைபாடும், அவளுக்கு வந்த டைஃபாய்டு காய்ச்சலும் கருவையும் வெகுவாக பாதிக்கத் தொடங்கியது. இதனால் கருவிலும் வலுவில்லை.

இதை டாக்டர் விஷ்வநாத்திடம் கூட சொல்லவில்லை ராம்குமாரிடம் தான் கூறினார்.

“உங்க தங்கை நல்லவிதமா குழந்தை பெத்துட்டா அது மிகப் பெரிய விஷயம் - கடவுளை வேண்டிக்குங்க..” என்ற அவர் கருத்து ராம்குமாரை ரொம்பவே கவலைப்பட வைத்துவிட்டது.

மாதவிக்கு இப்படி ஒரு கரு உண்டாகி அவள் சவலையாக பிள்ளையை சுமந்து கொண்டிருப்பதையும் தாமோதரின் உளவாளியும் அவர் காதுக்கு கொண்டு சென்று விட்டான்.

தாமோதர் விஷ்வநாத்தை அழைத்து மிக வெளிப்படையாக பேசினார்.

“நீ என் வாரிசுங்கறதனாலதான் உன் காதலை நான் ஒத்துகிட்டேன். ஆனா உனக்கொரு வாரிசு வர்றதுலயும் பிரச்சினை இருக்கறதா தெரியுது. உன் காதல் மனைவியால இந்த குடும்பத்துக்கு நல்ல

தொரு குழந்தையை தரமுடியலேன்னா, நீ அவளை விவாகரத்து செய்யறது தான் ஒரே தீர்வு.

ஏன்னா எனக்கு இந்த குடும்பத்துக்கு வாரிசு வேணும். என்னோட இந்த கருத்தை நீ ஆட்சேபிக்க மாட்டேன்னு நம்பறேன்-உன்னால ஆட்சேபிக்க முடியாது" என்ற அப்பா தாமோதரை விஷ்வநாத் தாலும் எதிர்கொள்ள முடியவில்லை. மனம் புழுங்கி னான். மைத்துனன் ராம்குமாரிடம் மட்டும் தாமோதர் சொன்னதை சொல்லி வருந்தவும் செய்தான். இந்த நிலையில் பிறக்கப் போகும் குழந்தை இறந்து பிறந் தால் அதை வைத்தே தாமோதர் விவாகரத்து விஷயத்தை கிளப்புவார் என்னும் பயம் விஷ்வநாத் துக்கும் ஏற்படவே விஷ்வநாத்துக்குள் ஒரே ஒரு எண்ணம் தான் தோன்றியது.

தந்திரத்தால் மட்டுமே அப்பா தாமோதரை சமாளிக்க முடியும் என்கிற முடிவிற்கு வந்தவன் மாதவியோடு தனிக் குடித்தனம் நடத்த முடிவு செய்து உங்களோடு இனி என்னால் ஒன்றுபட்டு வாழ முடியாது என்றும் கூறிவிட்டு இருவரும் வீட்டை விட்டே வெளியேறி விட்டனர்.

குழந்தையும் ஒரு வழியாக பிறந்தது.

நல்லவேளையாக உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை.

குழந்தை பிறந்து நன்றாக இருக்கும் தகவலும் தாமோதருக்கு போயிற்று. அவருக்கும் பேரனைப் பார்க்கும் ஆசை மனதைக் கிள்ளியது. ஆனால் வறட்டு கௌரவம் மிகவே தடுத்தது. விஷ்வநாத்



மாதவியின் குழந்தையும் சவலையாகத் தான் இருந் தது. ஒருநாள் ஈகோவை தூக்கிப் போட்டுவிட்டு பேரனைப் பார்க்க வந்துவிட்டார் தாமோதரன்.

இதனால் ஒரு சமாதானமும் ஏற்பட்டது.

'பிரிந்திருந்தது போதும். வீட்டுக்கு திரும்ப வந்து விடு' என்றார். விஷ்வநாத்துக்கும் இனி பிரச்சினை வரவாய்ப்பில்லை என்பதாலே திரும்ப வும் வீட்டுக்கு சென்றுவிட்டான்.

இதன் பின் வியாபார விஷயமாக தாமோதரும் வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டிய நிர்பந்தங்கள் ஏற்பட்டது. அப்படி அவர் அமெரிக்கா சென்ற போது கார் விபத்து ஏற்பட்டு அங்கேயே ஆஸ்பத்திரி யில் அட்மிட் ஆக வேண்டி வந்தது. கை எலும்பு கால் எலும்பு என்று எல்லா இடங்களிலும் முறிவு.

விஷ்வநாத் அமெரிக்கா சென்று தாமோதரைப் பார்த்தபோது அவர் ஒரு வெள்ளை மூட்டை யாகத்தான் தெரிந்தார்.

அப்போதே வக்கிலுக்கும் போன் செய்து தனக்கு எது வேண்டுமானால் நிகழலாம் என்பதால் தனது சொத்துக்கள் அவ்வளவும் தன் பேரப் பிள்ளைக்கே சேரும் என்றும் எழுதி விட்டார்.

ஒரு வழியாக விஷ்வநாத்தின் பிள்ளைக்கு ஒரு வயது நிரம்பும் சமயம் தாமோதரும் குணமாகி இந்தியா திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது தான் அந்த நடக்கக் கூடாத சம்பவம் நடந்தது. குழந்தை விஷக்காய்ச்சல் ஏற்பட்டதில் இறந்து விட்டது.

விஷ்வநாத் துடித்துப் போனான். குழந்தை இறந்த வருத்தம் ஒருபுறம். அப்பாவை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்கிற கேள்வி ஒருபுறம்.

குழந்தை இறந்து விட்டது என்றால் அடுத்து மறுமணம் பற்றிப் பேச்சு தான் எழும்.

மாதவியாலும் இன்னொரு பிள்ளை பெற முடியாத நிலை. இந்த இக்கட்டான சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வது என்று விஷ்வநாத் மாதவி இருவருமே தவித்த போதுதான் ராம்குமாருக்கு ஒரு ஒருவயது குழந்தை கைவசம் இருந்தால் சூழ்நிலை குழப்பத்தை சமாளிக்க முடியும் என்று தோன்றியது. அதற்கு ஏற்ப வடநாட்டு பிச்சைக்காரன் ஒருவன் பற்றி தெரிய வந்து அவனிடம் பணத்தை கொடுத்து ஒரு அனாதை குழந்தையை எப்படியாவது கொண்டுவரச் சொல்லவும், அவனும் ரத்னம் ஜானகி தம்பதிகளின் குழந்தையை திருடிக் கொண்டு போய் ராம்குமாரிடம் கொடுத்து விட்டு தற்காலிகமாய் வடநாட்டுக்கு போக முயன்ற போது எலெக்ட்ரிக் டிரெய்னிலும் அடிபட்டு செத்துப் போனான்.

குழந்தை அனாதை தானே? என்று ராம்குமார் கேட்டபோது கோயிலுக்கு வந்த நகைகடைகாரர் குழந்தை இது என்பதை சொல்லிவிட்டதால் ராம்குமாருக்கும், விஷ்வநாத்துக்கும் குழந்தையாருடையது என்று தெரியும். பின்னால் மாதவிக்கும் தெரிய வந்தது. இறந்துவிட்ட தன் குழந்தை தான் இந்த குழந்தை வடிவில் வந்திருப்பதாக இந்த நொடிவரை நினைத்துக் கொண்டிருக்கின்றாள்.

தாமோதரும் பேரனைப் பார்த்த சந்தோஷத்தில் மெல்ல குணமடைந்து இன்றும் நல்லபடியாக இருக்கிறார்.



இந்த குழந்தைதான் எதிர்காலத்தில் தாமோதரின் தொழில் சாம்ராஜ்யத்தையே கட்டி ஆளப் போகிறவன்.. இப்படிப்பட்டவனை பற்றிய ரகசியத்தை ஒருவன் எப்படிகண்டுபிடித்தான்?

அவன் யார்?

ராம்குமாருக்குள் புயல் வீசியபடி இருந்தது. அலைபேசியை இயக்கவும் திரும்பவும் அலைபேசியில் அழைப்பு!

“என்ன மேஜர், செல்போனை ஆஃப் பண்ணி வெச்சா பிரச்சனைல இருந்து தப்பிக்க முடியுமா? நான் பேசணும்னு முடிவு பண்ணிட்டா பலவிதத்துல பேசுவேன். உன் பங்களா எதிர்ல ஹேண்ட் செட் மைக்கோட கத்தக் கூட என்னால முடியும். கத்திக் காட்டட்டுமா?” என்று கேட்கவும் ராம்குமாருக்கு பிரச்சனை விஸ்வரூபம் எடுத்து நிற்பது புரிந்தது.

“சரி நான் இப்ப என்ன பண்ணணும்?”

“இந்த ரகசியம் என்னோட போகனும்னா பத்துகோடி தரணும்”

“வாட்... பத்து கோடியா?”

“இது ரொம்ப கம்மி.. ஐநூறு கோடிக்கு மேல் சொத்த வெச்சுகிட்டு பத்து கோடிக்கு அதிர்ச்சிய காட்டினா எப்படி மேஜர்?”

“இல்ல.. இது டூமச்... நீ பிளாக் மெயில் பண்றே - லுக்! நான் எந்த குழந்தையையும் திருடலை. அதுக்கு அவசியமும் எனக்கு இல்லை. நீ போனைவை.”

ராம்குமாரால் தற்காலிகமாக போனை உதறத் தான் முடிந்தது. ஆனால் பிரச்சினை இதனால் அடங்கிவிடும் என்று தோன்றவில்லை!

நெஞ்சை பெரிய அளவில் அடைக்கவும் செய்தது!

# 3

நம் இந்திய நாட்டுக்கு எவ்வளவோ சிறப்புகள் உண்டு. அதில் உலகம் வியக்கும் ஒரு சிறப்பு நம்மிடம் இருந்த வானசாஸ்திர நிபுணர்களும் அவர்களின் கண்டுபிடிப்புகளும் தான் அவர்களில் ஒருவர் வராகமிதிரர். இவரை ஜோதிட சாஸ்த்ரத்தின் தந்தை என்றுகூட கூறலாம்.

இவர்தான் வான் வெளியோடு மனிதன் எப்போதும் ஒரு தொடர்பில் இருக்கிறான் என்பதை கண்டறிந்தவர். இது அவன் மனமே அறிந்திடாத தொடர்பு. காற்றாலும் ஒளியாலும் அதனூடே நிலவுகிற புவி ஈர்ப்பு விசையாலும் உண்டான தொடர்பு. இந்த தொடர்பை பார்க்கும் வசதி நம் கண்களுக்குக் கிடையாது. பார்க்க முடிந்தால் நம் முதுகின் பின்புறத்தில் குரங்குக்கு வால் முளைத்தது போன்ற விதத்தில் ஒரு தொடர்பு ஏற்பட்டு அது வானில் நீண்டிருக்கும். இதை கதிர்த் தொடர்பு என்று கூறலாம். இதன் வழியாகவே கோள்களால் மனிதன் ஆட்டி வைக்கப்படுகிறான்.

அப்படி அவன் ஆட்டி வைக்கப்படுவதற்கு பின்னாலே பல காரண காரியங்கள் உள்ளன. அதை ஒரு வார்த்தையில் வினைகள் என்றோ கர்மம் என்றோ கூறலாம்!'



வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தை அடைந்து ஓய்ந்து நின்றது ரத்தினத்தின் கார்! வெளியே கரிய அமாவாசை இருள். கொடி மரத்தை பார்த்த போது மணி பத்தாகிவிட்டிருந்தது. இந்த இரவு வேளையில் அந்த மலைமேல் மனைவி ஜானகியோடு ஏறுவது எந்த அளவு சரி என்கிற கேள்வியும் தயக்கமும் நிறையவே ஏற்பட்டது.

அடிவாரத்தில் ஒரு இட்லிக் கடை!

அந்தக் கடையையும் கடைக்காரர் மூடிக் கொண்டிருந்தார். ரத்னம் அந்த கடையை நோக்கித் தான் நடந்தார். ஜானகியை காருக்குள்ளேயே இருக்கச் சொல்லி விட்டார்.

கடைக்காரரும் சபாரி சூட்டில் ரத்னம் வருவதை பார்த்து ஒரு பெரிய மனிதர் என்பதை யூகித்துக் கொண்டார்.

“ஐயா..”

“என்ன சாப்பிட இட்லி தோசைன்னு ஏதாவது வேணுமா?”

“கிடைச்சா பரவாயில்லை தான். அதே சமயம் நாங்க மலைக்கு போகணும்.. இப்ப போனா வழியில ஏதாவது பிரச்சினை..”

- என்று இழுத்தார்.

“பௌர்ணமின்னா நிறைய பேர் போவாங்க... நீங்க அமாவாசைக்கு போய் வந்திருக்கீங்களே..”

“அப்ப இந்த ராத்திரியல போக முடியாதா?”

“போகலாம். ஆனா ஒரு நாலஞ்சு பேரா போறது நல்லது. கைல பேட்டரி விளக்கு கட்டாயம் வேணும். பூச்சிபட்டுங்க ரொம்ப இருக்கும்.”

“நாலஞ்சு பேருக்கு இப்ப நான் எங்க போவேன். நானும் என் மனைவியும் சென்னைல இருந்து வந்துருக்கோம். இந்த அமாவாசை இரவுலதான் பகவதி யோகிங்கறவர் மேல் பால்சுனைல பூஜை செய்வாராமே...”

“ஓ நீங்க நம்ம யோகி யோட பூஜையை பாக்க வந்தவரா?”

“ஆமாம். அவரை உங்களுக்கும் தெரியுமா?”

“கேள்விப்பட்டிருக்கேன். கொஞ்சம் காத்திருங்க. திருப்பூர்ல இருந்து யோகியரோட பக்தர்கள்னு சிலர் ஒவ்வொரு அமாவாசைக்கும் வர்றாங்க. அவங்க எப்படியும் ஒரு ஏழெட்டு பேர் இருப்பாங்க. அவங்களோட சேர்ந்து நீங்க மேல போகலாம்..”

- கடைக்காரர் சொன்ன பதில் கொஞ்சம் போல மனதுக்கு ஒரு தெம்பை அளித்தது. முகத்திலும் ஒரு நிம்மதி ரேகைகளாய் ஓடிற்று. அந்த கடைக்காரரும் கவனித்தார்.

“ஆமா சென்னைல இருந்தா கார்லயா வர்றீங்க?”

“ஆமாம்... மதியம் 2 மணிக்கு புறப்பட்டோம், சேலம் வழியா கோயமுத்தூர் வந்து இங்க வந்து சேர இவ்வளவு நேரம் ஆயிடிச்சு.

“பரவால்ல வேகமாதான் வந்திருக்கீங்க..”



“வேகமா மட்டுமில்ல சோகமாவும் வந்திருக்கோம்.”

“நீங்க என்ன சொல்றீங்க?”

“என்னத்த சொல்றது... பெரிய பாவி நான். ஆமா இந்த பகவதி யோகிங்கறவர் பெரிய சித்தரா.. இவர் பூஜைல கலந்துகிட்டாலே போதும் எல்லா நல்லதும் நடக்க தொடங்கிடும்னு கேள்விப்பட்டேனே?”

“அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன். மாசாமாசம் அவர் பூஜையை பார்க்க முதல்ல திருப்பூர் காரங்கதான் வந்தாங்க. இப்ப எங்கெங்க இருந்தெல்லாமோ வர்றாங்க. கொஞ்ச நேரம் கழிச்சு பாருங்க - உங்களுக்கே தெரியும்”

“அப்ப கூட்டம் நிறைய இருக்குமா?”

“எப்படியும் அம்பது பேராவது வந்துடுவாங்க. அதேசமயம் இவ்வளவு பேர்தான் வரணும்னு சாமி முடிவு கட்டிடுவாராம். அவர் மனசுல அம்பது பேர் வரலாம்னு நினைச்சா அம்பது பேர் தான் வர முடியும். கூட ஒரு ஆள் கூட கலந்துக்க முடியாதாம்.”

“ஏன் அப்படி?”

“அதை அந்த சாமியதான் கேட்கணும்!”

“நல்லது.. நாங்க சாப்பிட சூடா ஏதாவது கிடைக்குமா?”

“இருங்க.. அடுப்ப அணைச்சு ஏற கட்டிட்டேன். இருந்தாலும் பரவாயில்லை உங்களுக்காக அடுப்பை மூட்டி சூடா நெய் தோசை போட்டு தரேன்.

சாம்பார் சட்னி எல்லாம் முடிஞ்சு போச்சு. மிளகாய் பொடியும் பூண்டுப் பொடியும் இருக்கு. பரவா யில்லையா?"

"ஆஹா அமிர்தமாச்சே.."

ரத்னம் தோசை போடச் சொல்லிவிட்டு கார் அருகே வந்து ஜானகியை இறங்கச் சொன்னார்.

"என்னங்க.. மலைக்கு போக முடியுமா?"

"உம்.. நிறைய பேர் வருவாங்களாம். சேர்ந்து ஏறுங்க - அதான் பாதுகாப்புன்னு கடைக்காரர் சொல்றாரு. வா நாம முதல்ல டிபன் சாப்பிடுவோம். நல்ல பசி எனக்கு.."

"இல்லீங்க. நீங்க சாப்பிடுங்க. நான் சாப் பிடலை."

"ஏன் ஜானகி பசியில்லையா உனக்கு?"

"அதெல்லாம் இருக்கு. ஆனா பூஜைல கலந்துக்க வந்துட்டு சாப்பிட என்னவோ போல இருக்குங்க. நான் அந்த சாமியாரை பாத்து அவர் நமக்கு ஒரு நல்லது சொல்றவரை ஒரு வார்த்தைகூட பேசப் போறதில்லை. பச்சதண்ணி கூட குடிக்கவும் போறதில்லை."

"இப்படி ஒரு விரதமா?"

"இது என்னோட நம்பிக்கைங்க.."

"நல்ல நம்பிக்கை போ.. சரி நான் போய் சாப்பிட்டு வரேன். நல்லா கேட்டுக்கோ - உன் பேச்சை நான் கேக்கறது இதான் கடைசிதடவை.



இன்னிக்கு மட்டும் நமக்கு ஒரு நல்ல பதில் கிடைக்க லன்னா என் வரைல சாமியே கிடையாதுன்னு தான் அர்த்தம். அது மட்டுமில்ல நான் இனி நம்ம புள்ள கிடைப்பான்னு தேவுடு காத்துகிட்டிருக்க மாட்டேன். ஒண்ணு நீ எனக்கு இன்னொரு பிள்ளையை பெத்து தரணும். இல்ல நாம ஒரு குழந்தையை தத்து எடுத்துக்கறோம்.."

ரத்னம் தீர்மானமாக பேசிவிட்டு கடைநோக்கிச் சென்றார். காருக்குள் ஜானகி கலங்கியபடியே உட்கார்ந்து விட்டாள். டிரைவிங் சீட்டில் இருந்த டிரைவர் தங்க ராஜிக்கு தன் பிள்ளைகளின் நினைப்பு வந்தது. அவருக்கு ஒன்றுக்கு நாலு பெண்கள். பிள்ளை வேண்டும் என்று ஆசைப்பட்டதில் நான்கும் பெண்களாகி விட்டது. அதை நினைத்து பெரு மூச்சுதான் வெளிப்பட்டது.

"நீ ஏம்ப்பா பெருமூச்சு விட்றே?" என்று கேட்டாள் ஜானகி.

"உங்கள நினைச்சு தாம்மா.."

"நீயும் எனக்காக பரிதாபப்பட ஆரம்பிச் சிட்டியா?"

"ஐயோ அம்மா உங்களுக்காக நான் பரிதாபப் படாத நாளே இல்லை. தங்கமானவங்க நீங்க. காசு பணத்துக்கும் பஞ்சமில்லை. ஆனா உங்களுக்கு பிள்ளை இல்லை. எனக்கோ நாலு பொண்ணுங்க. வர்ற வருமானம் வயத்துக்கே சரியா இருக்கு. இதுல இவங்கள எப்படி கட்டிக் கொடுக்க போறேன்னே தெரியல. இந்த கடவுள் ஏன் சோதிக்கிறான்னும் புரிய மாட்டேங்குது.

என் வரைல பிள்ளையே பொறக்க லேன்னா லும் நான் கஷ்டப்பட மாட்டேன். ஆனா உங்களுக்கு போய் அந்த குறைய வெச்சு சோதிக்கறான்."

தங்கராஜிடம் ஒரு விதமாய் கருத்து வெளிப் பட்டது.

"பிறக்கவேயில்லைன்னா கூட பரவால்லப்பா, பிறந்து ஒரு வருஷம் வளர்த்துட்டு அதை எமன் கிட்ட கொடுத்துட்டா கூட கொஞ்ச நாள்ள மனசு சமாதானமாயிடும். ஆனா என் மகனை எவன் கொண்டு போனான்னே தெரியலியே..?" ஜானகிக்கு குமுறியது மனது. டிரைவருக்கு எப்படி சமாதானம் கூறுவது என்று தெரியவில்லை.

"அம்மா தைரியமா இருங்கம்மா - உங்க மகன் நிச்சயம் கிடைச்சிடுவாம்மா. எங்கேயோ ஒரு இடத்துல அவன் நல்லதாம்மா இருப்பான்."

"இருக்கணும்... இல்லாட்டி என்னால தாங்க முடியாது" என்று கண்களை துடைத்துக் கொண்ட போது ஒரு வேன் வந்து நின்றது அதிலிருந்து ஒரு ஏழெட்டு பேர் இறங்கினர். வேனுடைய முகப்பில 'பகவதி யோகி பக்த சபை' என்கிற பேனர் கட்டப் பட்டிருந்தது. அவர்கள் அவ்வளவு பேரும் காவி வேட்டி காவிச்சட்டை என்று சபரிமலைக்கு செல்ப வர்கள் போல இருந்தனர்.

அவர்களைப் பார்க்கவும் ஜானகியிடமும் ஒரு நம்பிக்கை முளைக்க ஆரம்பித்தது. ரத்னமும் சாப்பிட்டு விட்டு வெளியே கை கழுவுவது தெரிந்தது. இனி புறப்பட வேண்டியதுதான்.



ஜானகி காரில் இருந்து இறங்கி புறப்பட தயா ரானாள். செருப்பை காரிலேயே விட்டாள். ஜானகியை பார்த்த வேனில் வந்தவர்களும் 'மலைக்கு வரப்போறீங்களா?' என்று கேட்டனர். ரத்னமும் கையை துடைத்தபடியே வந்து சேர்ந்தார். அவர்கள் கேள்விக்கு அவர் பதில் கூறினார்.

"நாங்க மலைக்கு வந்து பூஜையை பாக்கறது தான் எங்க நோக்கம். உங்களுக்காகத் தான் காத் திருக்கோம்.."

"அப்ப ரொம்ப சந்தோசம்.. புறப்படுங்க.." என்றார் வேனில் வந்தவர்.

"ஆமா... இங்க இருந்து ரொம்பதூரமோ?"

"ஆமாம்... மலைப்பாதை வேற - கோஷம் போட்டுகிட்டே ஏறினா ஏறிடலாம். தனியான்னா ராத்திரி வேளைல ரொம்ப கஷ்டப்படணும்." அவர் பதிலைத் தொடர்ந்து ரத்னம் ஜானகியை பார்த்தார்.

"என்னம்மா நடந்துடுவியா?"

"என் பிள்ளைக்காக நான் நடந்து என்ன முட்டி போட்டுகிட்டும் வருவேன்" என்ற ஜானகி அந்த வேன்காரர் முகத்தில் ஆச்சரிய உணர்வை உண் டாக்கினாள்.

அதன்பின் அவர்கள் நடக்கத் தொடங்கினர்.

திருப்பூர் வேனில் இருந்து வந்தவர்களை ஒரு ஐம்பது வயதுக்காரர் தான் வழி நடத்தினார்.

"தண்ணி பாட்டிலை மறந்துடாம எடுத்துக் குங்க. கைல கோலும் முக்கியம். ஒருத்தர் பின்னால

ஒருத்தர்னு போகணும். முதல்ல வழக்கம் போல நம்ம ராமநாதன் அய்யா போகட்டும், அய்யா நீங்க டார்ச் லைட்டை எடுத்துக்குங்க. கோஷத்த விட்டுடாதீங்க" என்று சொல்லி முடிக்க அவர்களும் அதேபோல மலைப்பாதையில் இறங்கி நடக்கத் தொடங்கினர்.

ரத்னத்தையும், ஜானகியையும் இறுதியாக தன்னோடு சேர்த்துக் கொண்டு நடந்தார் அவர்.

பேச்சு ஆரம்பமாகியது.

"ஐயா, உங்க பேருங்க.."

"என் பேர் ரத்னம் - சென்னைல நகை கடை வெச்சிருக்கேன்."

"ரொம்ப சந்தோஷம். ஆமா உங்களுக்கு இங்க நம்ம பகவதி யோகி சாமிய பத்தி யார் சொன்னது?"

"யாருன்னு தெரியாது. இன்னிக்கு காலைல திருநீர் மலைக்கு தரிசனத்துக்கு போயிருந்தோம். அங்க ஒருத்தர் வந்து சொன்னாரு"

"அவர் யாருன்னு தெரியாதா?"

"தெரியாது. ஆனா பாக்க ஒரு தேஜஸ் அவர் கிட்ட இருந்தது. பேச்சும் ஒரு கட்டளையா இருந்தது."

"சாமிய நீங்க தரிசிக்க வரதுக்கு ஏதாவது காரணம் இருக்கா?"

"இருக்குங்க... எனக்கு ஒரே ஒரு மகன். முதல் வருஷ பிறந்த நாளன்னிக்கு அவனுக்கு மொட்டை போட்டோம். அன்னிக்கே அவனை யாரோ கடத்திட்டாங்க.."



"அடடே.. கைக் குழந்தையை பறி கொடுத்த ங்களா நீங்க..."

"ஆமாம்.. அவனை இழந்து நடை பிணமா இருக்கோம்."

"கவலைப்படாதீங்க. எந்த ஒரு நல்லது கெட்ட துக்கும் ஒரு சரியான காரணம் உண்டுங்கறதுதான் பகவதியோகி சாமியோட சித்தாந்தம். ஆமா போலீசுக்கு போகலையா நீங்க?"

"போகாம இருப்போமா? ஆனா பிரயோஜன மில்லை. பல வகைல விளம்பரம் செய்தும் புண்ணிய மில்லை. இப்படியே நாலு வருஷம் ஓடிடிச்சு.."

"நாலு வருஷமா?"

"ஆமாம்யா.. இதே மாதிரி 48 அமாவாசைக்கு முந்திதான் அவனை நாங்க தொலைச்சோம்.."

"கடவுளே... உங்க விதிக் கணக்கு ரொம்ப கொடுமையான கணக்கா இருக்கும் போல தெரியுதே..."

"என்ன விதிக் கணக்கோ.. நகை வியாபாரம் செய்தாலும் நான் முறையா, வரிகட்றவன். அதனல அள்ளி அள்ளி சம்பாதிக்க முடிஞ்சாலும் சம்பாதிக்க நான் விரும்பலை. நாணயமாதான் சம்பாதிக்கறேன். முடிஞ்ச அளவுக்கு ஏழை பாழைக்கு நான் உதவி செய்யறேன். இருந்தும் கடவுள் என்னை இப்படி சோதிச்சா நான் என்ன செய்ய..?"

ரத்னம் குரலில் வருத்தம் இழையோடிற்று கேட்டுக் கொண்டே வந்த நபரிடம் அதற்கு எந்த

பதிலுமில்லை. "என்ன எதுவும் சொல்ல மாட்டேங்க நீங்க?"

"சொல்ல என்ன இருக்கு... உங்களுக்கு உங்க வருத்தம். கேட்க சங்கடமா இருக்கு.."

"ஐயா.. உங்க அனுதாபமும் பரிதாபமும் எனக்கு வேண்டாம். எனக்கு தேவை என் குழந்தை. அதை உங்க சித்த யோகியால எங்களுக்கு கிடைக்க வைக்க முடியுமா?"

"அப்ப ஒரு எதிர்ப்பார்ப்போட தான் வந்தருக்கீங்கன்னு சொல்லுங்க."

"நிச்சயமா... இல்லேன்னா ஐநூறு கிலோ மீட்டர் தூரத்துக்கு கடைல பிசியா வியாபாரம் நடக்கறத கூட சிப்பந்திகளை பார்த்துக்க சொல்லிட்டு நான் எதுக்கு வரணும்?"

"அதுவும் சரிதான்.. ஆனா உங்க கேள்விக்கு பதில் எனக்கு தெரியலீங்க.. சித்த யோகிதான் உங்களுக்கு இதுக்கு பதில் தரணும். ஆனா அவர் கிட்ட ஒரு கெட்ட பழக்கம். யாராச்சும் அவர் கிட்ட எதையாச்சும் எதிர்பார்த்து வந்தாலே அவருக்கு பிடிக்காது. கரெக்டா அவங்க கிட்ட வரும் போது முகத்தை திருப்பிக்குவாரு..."

- திருப்பூர்காரரர் சொன்ன பதில் பேசாமல் நடந்து வந்தபடி இருந்த ஜானகியை அரட்டிவிட்டது.

"ஐயோ என்ன சொல்றீங்க.. நான்வர்றதே யோகி அய்யா ஏதாவது நல்ல வழி காட்டுவார்னு தான் வர்றேன்" என்று பதட்டமான குரலில் பேசினாள்.



"இருக்கலாம்மா... அவர் வரைல எதையும் யாரும் கேட்கத் தேவையில்லை. அவரே முகத்தை பார்த்து புரிஞ்சுக்குவாரு அதனால அப்படி சொன்னேன். நீங்க தைரியமாவாங்க.. நான் சொன்னதையும் மனசுல வெச்சுக்குங்க... உங்களுக்கு நல்லதே நடக்கட்டும்..."

"சரிங்க.. உங்க பேர் என்னன்னு சொல்லலியே.."

"பொன்னுசாமிங்க..."

"உங்களுக்கு சாமிய எப்படி தெரியும். நீங்க எத்தனை வருஷமா வர்றீங்க?"

"நான் பத்து வருஷமா வர்றேன். சாமிய முதன் முதலா பார்த்ததே நான் தான். இந்த வெள்ளியங்கிரி மலைக்கு நான் அமாவாசைக்கு அமாவாசை வருவேன். அப்ப என் வரைல ஒரு அதிசயத்தை நான் கண்ணால கண்டேன். சாமி தரிசனம் முடிஞ்சு வரும்போது சுனைகிட்ட பகவதி யோகி சாமி படுத்திருந்தார். அப்ப அவர் தலைமாட்டுல ஒரு நல்ல பாம்பு படம் விரிச்சுகிட்டு நின்னுகிட்டிருந்துச்சு. எனக்கு அத பார்த்த மாத்திரத்துல உயிர்க்குலையே நின்னு போச்சு. சாமி இப்படி தலைக்கு மேல் பாம்பு இருக்கறது தெரியாம தூங்கி கிட்டு இருக்காரே என்ன ஆகுமோன்னு பயந்துட்டேன். நான் பாத்து விட்டு இருக்கும் போதே பாம்பு அப்படியே அவர் உடம்பு மேல ஏறி கால்வழியா இறங்கி கடந்து போச்சு. எனக்கு பிறகு தான் உயிரே வந்தது. சாமியும் கண் திறந்தாரு. என்ன பார்த்து என்ன பயந்துட்டியான்னு கேட்டாரு.. ஆமான்னேன். எதுக்கு பயப்படணும். அது சாமி.. பாம்பு வடிவத்துல சுத்திகிட்டு

இருக்காரு. என் கூட பேச வந்தவர் நான் தூங்கவும் காத்திருந்தாரு - உன்னை பாக்கவும் என்னையும் எழுப்பி விட்டுட்டு போயிட்டாருன்னு சொன்னாரு.

இதுதான் எனக்கும் சாமிக்குமான முதல் அனுபவம். அதை எந்த அளவு நம்பறதுன்னு எனக்கு குழப்பமா இருந்தது. அப்ப நான் எதுவும் பேசலை. பேசாம இறங்கி போயிட்டேன். அடுத்த தடவை மலைக்கு வரும்போது நான் முதல் தடவை பார்த்ததை விடவே பெரிய சோதனை.

சாமி சுனைகிட்ட ஒரு மரத்தடில படுத்திருந்தாரு. இந்த முறை காலடில ஒரு சிறுத்தை புலி படுத்திருந்தது. எனக்கு பகீர்னு ஆகிப் போச்சு. இருந்தாலும் போன தடவை பாம்பை அவர் சித்தர் சாமின்னு சொன்னது நினைவுக்கு வந்தது. அதனால இதுவும் அந்த மாதிரி சாமியாதான் இருக்கணும்ன்னு நினைச்சு புலியை பார்த்து கும்பிட்டேன். புலியும் ரொம்ப சாதுவா கன்னுகுட்டி மாதிரியே என்ன பார்த்துச்சு. பிறகு எழுந்து காட்டுக்குள்ள போயிடிச்சு. எனக்கும் உயிர் வந்துச்சு, கொஞ்ச நேரத்துல சாமி எழுந்திரிக்கவும், புலி விஷயத்த சொன்னேன். உடனேயே சாமி என்கிட்ட அது சாமி இல்ல.. காட்டுப் புலிதான் - ஆனா அதை இந்த வெள்ளியங்கிரி மலைல நடமாட்ற சித்தர் சாமிங்க வசியக் கட்டுல வெச்சிருக்கறதால அது தன் சுபாவத்தை மறந்து திரியுதுன்னு சொன்னாரு. எனக்கு தூக்கி வாரிப் போட்டுடுச்சு. இப்படி சாமிக்கு பின்னால நிறைய சம்பவங்க. இதை எல்லார்கிட்டயும் சொல்ல முடியாது. சொன்னா நம்பவும் மாட்டாங்க. நான் நல்லா கதை விட்றதா சொல்வாங்க. அதனால நான் யார்கிட்டேயும் சொல்றதில்லை..."



பொன்னுசாமியின் பேச்சைக் கேட்ட ரத்னத்திடம் வெகு நேரத்துக்கு பதிலுக்கு பேச்சே இல்லை. ஞானகியும் சற்று அரண்டு தான் போயிருந்தாள்.

"என்ன உங்களால நான் சொன்னதை நம்ப முடியலியா?"

"ஆமாங்க... நீங்க சொன்னதை நம்பறதுக்கு கொஞ்சம் கஷ்டமாதான் இருக்கு.."

"நினைச்சேன்..."

"அதுக்காக நீங்க பொய் சொல்றீங்கன்னு சொல்ல வரலை."

"வேடிக்கையா இருக்கு உங்க பதில். நம்பவும் முடியலை - நான் பொய்யும் சொல்லலைன்னா எப்படீங்க..?"

"அதாவது நீங்க சொன்ன உண்மையை கண்ணால பாக்காம ஏத்துக்கறது ரொம்ப கஷ்டம். அதனால அப்படி சொன்னேன்."

"அப்ப உங்க வரைல நடந்தா மட்டுமே நம்புவீங்க. அப்படி தானே?"

"ஆமாம். இது அப்படி தான். இங்க நான் உங்களுக்கு ஒரு கருத்தை சொல்லிக்க விரும்பறேன். என் நகைகடை சென்னைல ஒரு மெயின் ரோட்ல ஒரு சரியான இடத்துலதான் இருக்கு. அந்த மெயின் ரோடுல அடிக்கடி அரசியல் பொதுக் கூட்டங்கள் போடுவாங்க. அதுல ஒரு தடவை பகுத்தறிவுப் பிரச்சார கூட்டம் ஒண்ணு நடந்தது. அப்ப நான் கடைல கல்லாவுல உட்கார்ந்திருக்கேன். என் கா்துல

அந்த பகுத்தறிவுவாதிங்க பேச்செல்லாம் விழுந்து கிட்டே இருந்துச்சு. அவங்க பேச்சுலயும் நிறைய நியாயம் இருக்கற மாதிரிதான் எனக்கு தோணிச்சு.

"அப்படி அவங்க என்ன பேசினாங்கன்னு சொல்ல முடியுமா?"

"சொல்றேன்..ஆமா இன்னும் எவ்வளவு தூரம் இருக்கு?"

"அதை மட்டும் கேட்காதீங்க. பேசிகிட்டே போய்கிட்டு இருக்க வேண்டியதுதான்."

"இல்ல இப்பவே கால் வலிக்கற மாதிரி இருக்குது."

"அப்ப நாம அரட்டை அடிக்கறத நிறுத்திகிட்டு சாமி மேல் சரண கோஷம் போடுவோம்.."

"அது இன்னும் கஷ்டம் எனக்கு.."

"பரவால்ல... மனசுல தோன்றத ஒளிவு மறைவு இல்லாம பேசிட்டீங்க. அந்த வகைல ரொம்ப சந்தோஷம். சரி கொஞ்சம் உட்கார்ந்துட்டு பிறகு கிளம்பு வோம்.." என்றார் பொன்னுசாமி. அதற்கு தோதாக ஒரு பாறை கண்ணில் பட்டது. டார்ச் வெளிச்சத்தில் அதன் மேல் துண்டை விரித்து அமர்ந்தார்.

அவர்களும் அமர்ந்தனர்.

மலைக் காற்று நீவி சென்றது. வியர்த்த உடம்புக்கு ஜில்லென்ற உணர்வை தந்தது.



பொன்னுச் சாமியோடு வந்தவர்களோ மலை மேல் வெகு தூரத்தில் இருந்தனர். சன்னமாக அவர்கள் எழுப்பும் வெள்ளியங்கிரி மலை பரம சிவத்துக்கு அரோகரா என்றும் பகவதி சித்தர் பாதங்களுக்கு சரணம் சரணம் என்றும் கோஷமிட்டபடி சென்று கொண்டிருந்தனர்!

ரத்னம் கை கெடிகாரத்தை பார்த்தார். மணி பதினொன்று!

## 4

உலகத்திலேயே மிக ஆச்சரியமான விடை தெரியாத ஒரே கேள்வி எவ்வளவு முயன்றும் சிலரால் ஏன் முன்னேற முடியவில்லை. எதுவுமே செய்யாத சிலர் எப்படி முன்னுக்கு வருகின்றனர் என்பது தான்.

இந்த கேள்வி நம்மிடம் மட்டுமல்ல உலகம் முழுக்கவே உள்ளது. இதற்கு அமெரிக்கன், பௌத்தன், ஆப்பிரிக்கன் இஸ்லாமியன், கிறித்தவன் என்கிற பேதமெல்லாம் கிடையவே கிடையாது.

இதற்கு தெளிவான ஒரு பதிலை யாராலும் கூற முடிவதில்லை. இந்த கேள்விக்கு குழப்பமான பதிலை சொல்கின்றவர்கள் வேண்டுமானால் பலர் உண்டு. அவர்கள் பதில் ஒன்றே ஒன்றுதான். ஒருவர் இன்னும் முன்னுக்கு வரவில்லை என்றால்

அவர் இன்னும் சரியாக முயற்சி செய்யவில்லை என்றும், வந்தவர் வரையில் அவர் அவருக்கே தெரியாமல் செய்திருப்பார் என்பதே எங்கள் கருத்தாகும் என்று சிலர் கூறுவார்கள். அதாவது இவர்கள் விதி, கர்மா, பாவம் புண்ணியம் போன்றவைகளை நம்பாதவர்கள் இவர்கள் தான் இப்படிக் கூறுவார்கள். ஆனால் இந்த கேள்விக்கு ஆணித்தரமான பதிலைச் சொன்ன ஒருவரும் நம்மிடையே உள்ளார். அவர்தான் காஞ்சி முனிவர் என்று ஆன்மீக உலகம் பெரிதும் போற்றி மகிழும் காஞ்சி பரமாச்சாரியார் ஆவார்.

இதற்கு அவர் பதிலாக சொல்லலாம் ஒரு அனுபவத்தை ஏற்படுத்தி புரிய வைத்தார். அது?

❑❑❑

**அ**ந்த பங்களாவில் எல்லோரும் உறங்கி விட்டிருந்தார்கள். ராம்குமாரின் அறையில் மட்டும் விளக்கு எரிந்தபடி இருந்தது. எதிரில் LCD டி.வியில் உலகக் கோப்பை கால்பந்து போட்டி நடந்து கொண்டிருந்தது.

ஜெர்மனியின் விளையாட்டு மைதானத்தை அந்த டி.வி. தனக்குள் வாங்கி அந்த பங்களாவுக்குள்ளேயே கொண்டு வந்து விட்டிருந்தது.

விளையாட்டுச் சந்தோஷத்தில் நமக்கு பல உண்மைகள் தெரிவதேயில்லை. இது எத்தனை பெரிய விஷயம்? எவ்வளவோ ஆயிரம் மைல்களுக்கு மின்சாரத்தின் உதவியுடன் உட்கார்ந்த இடத்தில் பார்க்க முடிவது என்பது எத்தனை பெரிய வசதி - எவ்வளவு பெரிய வாய்ப்பு?



ராம்குமார் உலகையே மறந்து பார்த்துக் கொண்டிருந்தபோது கதவைத் தட்டும் சப்தம். எழுந்து போய் திறந்தான். அவன் தங்கை மாதவிதான் கதவை தட்டிவிட்டு வெளியே நின்று கொண்டிருந்தாள்.

"உள்ளவா மாதவி - இன்னுமா நீ தூங்கலை?"

"தூக்கம் வரலைண்ணே - ஆமா நீ உன் செல் போனை ஆஃப் பண்ணி வெச்சிருக்கியா?"

"ஆமாம்மா.."

"அண்ணே.. நீ எப்பவும் ஆஃப் பண்ண மாட்டியே?"

"அது.. அது" ராம்குமார் அவளிடம் பகலில் வந்த போனைப் பற்றி சொல்ல முடியாதவனாக என்ன பொய் சொல்வது என்பதும் தெரியாதவனாக மிடறு விழுங்கினான்.

"என்ன அது- செல் ரிப்பேர் கிப்பேர் ஆகிடிச்சா?"

அவளே எடுத்துக் கொடுத்தாள்.

"அ.. ஆமாம்மா.."

"நினைச்சேன்... அவர் இன்னும் ஆபிஸ்ல இருந்து வரலை. லேட்டாகும்னு எனக்கு போன் பண்ணி சொன்னார். அப்படியே உனக்கும் போன் பண்ணியிருக்கார். ஸ்விட்ச் ஆஃப்னு வரவும் ஆச்சரியப்பட்டு என்கிட்ட பேசும் போது சொன்னார். அதான்கேட்டேன்..."

"அப்படியா?"

"சரிண்ணே - நான் போய் படுக்கறேன். நீயும் படு. நேத்து டி.வி. பார்த்துட்டே அதை அணைக்காமலே தூங்கிட்டே. நான்தான் காலைல பாத்துட்டு அணைச்சேன். தெரியுமா?" என்றபடியே திரும்பிப் போனாள்.

அவனுக்கும் கொஞ்சம் ரிலீஃப் ஆக இருந்தது.

அறை கதவை திரும்ப தாழ் போட்டு விட்டு வந்தவன் மெல்ல செல்லை எடுத்தான். ஆன் செய்யலாமா என்று யோசித்தான். இவ்வளவு நேரத்துக்கு பிறகு அந்த பிளாக்மெயிலரிடம் இருந்து போன் வராது என்றும் தோன்றவே அதை ஆன் செய்தான். திரையில் வெளிச்சம் உருவாகி குழந்தை மகேந்திரனின் புன்னகை முகம் டிஸ்ப்ளே போர்டில் தெரிந்தது. அழகான குண்டு முகம். பார்த்த மாத்திரத்தில் மனதில் ஒரு ஜில்லிப்பு. கூடவே அவனைப் பற்றின அந்த உண்மை எப்படி வெளியே போனது என்கிற கேள்வி.

எவ்வளவு யோசித்தும் அதற்கு மட்டும் விடை கிடைக்காத நிலையில் செல்போனில் அழைப்பொலி!

புதிய எண்கள்..

எடுத்து காதில் வைக்க தயக்கமாக இருந்தது.

தயக்கத்தை இடைவிடாத ரிங்டோன் உடைத்து எரிந்தது. அது அதிகம் ஒலித்து மாதவி திரும்பி வந்தால் தான் ரிப்பேர் என்று சொன்னது பொய்யாகி அவள் முன் திரும்ப ஒரு பொய் கூறும் நிலை வந்து விடும் என்று பயந்தவன் சட்டென்று எடுத்து மெல்லிய குரலில் ஹலோ என்றான்.

"என்ன மேஜர்.. இப்படியா செல்போனை ஆஃப் பண்ணி வெச்சு என்னை சோதிப்பீங்க... ரொம்ப



பயந்துட்டீங்கன்னு இதுல இருந்தே நல்லா தெரியுது.." என்றது மறுமுனை.

ராம்குமாருக்கே குப்பென்று வியர்த்து விட்டது.

சட்டென்று அந்த போனுக்கொரு பதிலை சொல்ல முடியவில்லை. வேறு வழியே இன்றி அணைக்கத்தான் தோன்றியது.

அதேபோல அணைத்து செல் போனையும் தூக்கி கட்டில் மேல் வீசி எரிந்தான்.

உடம்பெல்லாம் பதறி நடுங்கியது.

நான்கு வருடங்களாக கொஞ்சம் கொஞ்சமாக மறக்கப்பட்டு முழுவதுமாக மறந்து விட்ட நிலையில் புதைந்த பிணத்தை தோண்டி எடுப்பது போல அந்த ரகசியத்தை கிளறும் இவன் யார்?

எப்படி இவனுக்கு தெரியும்?

ஒருவேளை விஷ்வநாத் எங்காவது உளறி அதனால் இப்படி ஆகியிருக்குமோ?

இவனை எப்படி சமாளிப்பது? கேள்விக்குள் விழுந்து ராம்குமார் புரண்டு நெளிந்த போது திரும்பவும் கதவு தட்டப்படும் சப்தம்!

முகத்தில் வழிந்த வியர்வையை துடைத்தபடியே போய் திறந்தான். வெளியே மாதவி.

"என்ன மாதவி?"

"உன் போன் ஒர்க் பண்ணுதாட்டம் இருக்குண்ணே?"

"என்னம்மா சொல்றே?"

"இப்ப அதோட ரிங்டோன் கேட்டுச்சே.."

"இல்லம்மா.. டிவில சீரியல் பார்த்துகிட்டிருந்தேன். அதுல ஒரு கேரக்டர் கைல இருந்த செல்போன் சப்தம் அது..."

"நீ பொய் சொல்றே.. உன் கூட பேசிகிட்டிருந்த ஒருத்தர் நீ பாதியில கட் பண்ணிட்டதால என் லைன்ல வந்து உங்க பிரதரை கொஞ்சம் என்கூட பேசச் சொல்லுங்கன்னுல்ல சொல்றார்.."

"என்னது அவன் உன் லைன்ல வந்துட்டானா?"

ராம்குமார் தன்னை மறந்து உண்மையை ஒப்புக் கொள்வது போல கேட்டு விட மாதவி தன் கரிய விழிகளை அகலமாக விரித்தவளாக கோபத்தோடு பார்த்தாள்.

"மாதவி.. நீ அப்படி பாக்கதே. அவன் ஒரு இம்சை பிடிச்சவன் என் ஃப்ரெண்டுதான். உன் மூஞ்சியிலயே முழிக்கமாட்டேன்னுட்டு வந்துட்டேன். என்கிட்ட மன்னிப்பு கேட்கத்தான் அவன் துரத்தறான். அவனுக்கு பயந்துகிட்டுதான் நான் ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வெச்சேன்."

ராம்குமார் தனக்கு அப்போது தோன்றிய விதத்தில் சமாளித்தான். மாதவியும் அதற்கு மேல் அவனை நோண்டாமல் "என்ன ஃப்ரண்டோ என்ன சண்டையோ?" என்று தலையில் அடித்துக் கொண்டு விலகினாள்.

பெட்டின் மேல் செல் கிடந்தது. அதையே திரும்பி வெறித்துப் பார்த்தான் ராம்குமார்.

"இதை யார் கண்டு பிடித்தது..? இப்படி பாடாய் படுத்துகிறதே... ச்சே!" என்றபடியே கையில் எடுத்தான்.



ஒரு முடிவிற்கும் வந்தான். அதற்கு முன்னதாக எழுந்து சென்று பீரோவை திறந்து தனது லைசென்ஸ்டு பிஸ்டலை எடுத்து ஒரு பார்வை பார்த்தான்.

பின் திரும்பி வந்து ஸ்விட்ச் ஆன் செய்தான்!

அடுத்த நொடியே அழைப்பொலி...

"என்னப்பா.. எப்ப எப்பன்னே உக்காந்திருப்பியா?"

"நிச்சயமா.. என் வரைல இது ஒரு பத்து கோடி ரூபா விஷயமாச்சே?"

"பத்து கோடி.. விலையே ஃபிக்ஸ் பண்ணிட்டியா?"

"ஆமா.. இன்னிக்கெல்லாம் ஐநூறு கோடி ரூபா சொத்துல்ல அந்த பையன் பேர்ல இருக்கு."

"இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?"

"எதுக்கு இந்த வேண்டாத கேள்வி."

"எனக்கு இது ரொம்ப முக்கியமான கேள்வி. இதுக்கு பின்னால இன்னும் பல ரகசியங்கள் இருக்கு. அதனால கேட்டேன்."

"என்னப்பா நீ.. எனக்கு எடுத்து கொடுக்கறியே. எனக்கு தெரிஞ்சதெல்லாம் ஒரே ஒரு ரகசியம் தான். அது இந்த குழந்தையை நீ தான் திருடினே.. நீதான்னா ஒரு வடநாட்டு பிச்சைக்காரனை பயன்படுத்தி திருடினே.. அவ்வளவுதான்"

"அப்ப அதுக்கு மேல் உனக்கு எதுவுமே தெரியாதுன்னு சொல்லு."

"நீ கேக்கறத பார்த்தா அதுக்கு மேலயும் இருக்குன்னு சொல்லு."

"இருக்கு.. ஆனா உனக்கு தெரிஞ்சிருக்காங்கறது தான் என் கேள்வி."

"அப்ப எனக்கு அதெல்லாம் தெரியலைன்னா நான் இப்ப கேட்ட பத்து கோடிய தர மாட்டியா?"

"பத்து கோடி பத்து கோடின்னு நீயா முடிவு செய்துட்டா போதுமா... என்னால எவ்வளவு தர முடியும்னு இருக்குல்ல?"

"நீ எதுக்கு தரணும். உன் தங்கச்சி புருஷன் அதான் அந்த விஸ்வநாதன் கிட்ட கேட்டு வாங்கிக் கொடு..."

"புரியுது.. இப்ப நான் மாட்டேன்னா என் மாப்ளை கிட்ட போவே அப்படித்தானே?"

"சந்தேகமே வேண்டாம். என் வாழ்க்கைல அபூர்வமா ஒரு சான்ஸ் கிடைச்சிருக்கு. இதை நான் பயன்படுத்த தவறினா என்னைவிட முட்டாளை நீ பார்க்க முடியாது."

"நீ பொய் சொல்லி பிளாக் மெயில் பண்றேன்னு நான் போலீசுக்கு போனா என்ன பண்ணுவே?"

"என்ன.. என்னை ஆழம் பாக்கறியா? நல்லா கேட்டுக்கோ... இது ரத்னா ஜூவல்லரி ரத்னம் கறவரோட குழந்தை. அந்த மனுஷன் குழந்தையை



தொலைச்சுட்டு பேயா அலைஞ்சுகிட்டு இருக்கான். போலீஸ்காரங்க கேட்டப்பெல்லாம் ஆயிரமாயிரமா கொடுத்துருக்கான். அவனுக்கு ஒரு போன் பண்ணி உன் குழந்தைதான் இப்ப விஸ்வநாதன் கிட்ட இருக்குன்னு பத்த வெச்சேன்னு வை. உன் மானம் மரியாதை அவ்வளவும் காலி. கடைசியா விஷயம் மரபணு சோதனைல போய் முடியும். அங்க உன் மாப்ளை வண்டவாளம் தண்டவாளத்துல ஏறிடும்.

உனக்கு இதெல்லாம் தேவையா..? யோசிச்சுக்க.. உனக்கு நான் 12 மணி நேரம் டயம் தரேன். அதுக்குள்ள பண விஷயத்துல ஒரு முடிவுக்கு வா. எதுக்கும் உன் மாப்ளை கிட்டேயும் கலந்துக்க..."

அவன் பேசி முடித்துவிட ராம்குமாருக்குள் திரும்பவும் புயல் வீசத் தொடங்கியது. அப்போது கார் ஹாரன் சப்தமும் கேட்டது.

மாப்பிள்ளை விஸ்வநாத் வந்துவிட்டதன் அறிகுறி!

"அப்பா.." என்று அந்த வேளையில் குழந்தை மகேந்திரன் எழுந்து ஓடும் சப்தமும் கேட்டது.

மெல்ல கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தபோது விஸ்வநாத் மகேந்திரனை தோளில் அணைத்தபடி பிரீஃப் கேசை இன்னொரு கையில் பிடித்துக் கொண்டே வந்து கொண்டிருந்தான்.

பார்க்கவே அழகாக இருந்தது.

இந்த அழகு கொள்ளை போய் விடுமோ என்று பயமாகவும் இருந்தது.

மாதவியும் வந்து நின்றாள்.

"ஏன் இன்னும் இவன் தூங்கலை?"

"உங்களாலதான்.. உங்கள பார்க்காம ஐயா தூங்க மாட்டாராம்..."

"என்ன மகே... சீக்கிரமா தூங்கினாதானே நாளைக்கு ஸ்கூலுக்கு போக சீக்கிரமா எழுந்திருக் கலாம்.."

"நாளைக்கு எனக்கு ஸ்கூல் லீவாச்சே.."

"ஓ.. அதான் முழிச்சு கிட்டிருக்கியா?"

"ஆமாம்.. அப்படியே தாத்தா கூட செஸ் விளையாடி கிட்டும் இருந்தேன்.."

"அட்றா சக்கைன்னானாம்... இந்த வயசுலயே செஸ்ஸா?"

"இப்ப இருந்தே பிராக்டிஸ் பண்ணாதான் பின்னால நானும் விஸ்வநாதன் அங்கிள் மாதிரி வரமுடியுமாம்.."

"அதுவும் சரிதான்... சரி போய் படுத்துக்க ஓடு.. ஓடு.."

விஸ்வநாத் மகேந்திரனை போகச் சொல்லி விட்டு கழுத்து டையை கழற்றத் தொடங்கினான். மாதவி குனிந்து கால் ஷூ லேசை கழற்றினாள். அவனிடம் பெருமூச்சு வெளிப்பட்டது.

சோபாவில் விழுந்தான்.

"என்னப்பா... ரொம்ப டயர்டா இருக்கா?"

"ஆமாம் மாதவி... இன்னிக்கு மீட்டிங் ரொம்ப இழுத்துடிச்சு.."



"நாளைக்கு தள்ளி வெச்சிருக்கலாமே..?"

"முடியல.. அப்புறம் உனக்கொரு குட் நியூஸ்.."

"என்னங்க..."

"இந்த வருஷம் சிறந்த தொழிலதிபருக்கான சேம்பர் ஆஃப் காமர்சோட விருது எனக்கு தான் கிடைச்சிருக்கு..."

"வாவ்.. கங்கிராஜிலேஷன்ஸ்ங்க..."

"என் பத்து வருஷ கனவு. கடைசில இந்த வருஷம் தான் நிறைவேறியிருக்கு... அதே போல லயன்ஸ் கிளப் ஆசியா பிரசிடென்ட்டுக்கு நாமினேட் ஆகியிருக்கேன். நிச்சயமா அதுவும் கிடைச்சிடும். அது ரொம்ப பெரிய கௌரவம்..."

விஸ்வநாத் சொல்லும் விஷயங்கள் அவ்வளவும் சந்தோஷச் செய்திகளாகவே இருந்தது. அவ்வளவும் அறை வாசலில் நின்று கவனித்துக் கொண்டிருந்த ராம்குமார் காதிலும் விழுந்தபடி இருந்தது.

இப்படி ஒரு சமயத்தில் இந்த பிளாக் மெயில் மேட்டரை போய் சொல்வதா என்ற கேள்வியும் எழுந்தது. காலையில் பார்த்துக் கொள்ளலாம். இல்லாத பட்சத்தில் நாமே சமாளிக்கப் பார்ப்போம் என்று முடிவெடுத்தான். கதவை அடைத்து விட்டு கட்டிலில் போய் விழுந்தான். கெடிகாரத்தில் இரண்டு முட்களும் இணைந்துவிட்ட பன்னிரெண்டு மணிப் பொழுது!

5

நாம் செய்யும் செயல்கள்தான் பாவ புண்ணியமாக மாறுகிறது. நிழல் போல் அது தான் கூடவே வருகிறது. இதை மற்ற மதங்கள் மறுக்கின்றன. பாவ புண்ணியத்தை ஒப்புக் கொள்ளும் மதங்கள் மறுபிறப்பை ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் இந்து மதம் நம் பாவ புண்ணியங்களை நாம் அனுபவித்து தீர்க்க வேண்டும் அதற்கேற்ப பிறவிகள் அமையும் என்கிறது.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தை காஞ்சிப் பெரியவர் வாழ்வில் நாம் பார்க்கலாம்.

அவரைத் தரிசிக்க உலகெங்கும் இருந்து எல்லா மதத்தை சேர்ந்தவர்களும் வருவதுண்டு. அவ்வகையில் லண்டனைச் சேர்ந்த ஒரு பெண்மணியும் பெரியவரை தரிசனம் செய்தார். அவ்வேளையில் அந்த பெண்மணிக்குள் பலவிதமான கேள்விகள்! அவைகளை பெரியவரிடம் சந்தேகம் தெளிவதற்காக கேட்டார். அதில் ஒரு கேள்வி மிக முக்கியமானது. இந்து மதத்தில் ஏன் எல்லா கடவுளும் கையில் ஏதோ ஒரு ஆயுதத்துடன் இருக்கின்றன. திரிசூலம், சக்கராயுதம், கதாயுதம், வாள் என்று ஆயுதம் இல்லாத கடவுளே இல்லையே.. கடவுள் என்பவர் அன்பே வடிவானர். அப்படிப்பட்டவர் கையில் ஆயுதங்களா? என்பது அந்த பெண்மணியின் கேள்வி.



அதற்கு பெரியவரும் அரிய பதிலைச் சொன்னார். அது?

□□□

வெள்ளியங்கிரி மலைச் சரிவில் பாறை மேல் அமர்ந்திருந்த ரத்னம் தன் கைக் கெடிகாரத்தை பார்த்த போது மணி பன்னிரெண்டு. அதிக நேரம் உட்கார்ந்துவிட்ட ஒரு உணர்ச்சியோடு "சரிங்க சாமி நாம புறப்படுவோம் - ரொம்ப நேரம் உட்கார்ந்துட்டோம்" என்றபடியே எழுந்திருந்தார்.

பொன்னுசாமியும் புன்னகையோடு எழுந்து கொண்டு நடக்கத் தொடங்கினார். அவரோடு வந்தவர்கள் மலை உச்சியை அடைந்து அங்கிருந்தும் அடுத்த கட்டத்தை எட்டி விட்டிருந்தார்கள்.

"சாமி உங்க ஆட்கள் எல்லாம் வேகமா போய்ட்டாங்களே.."

"அவங்களுக்கு நடந்து நடந்து பழக்கம் - வேற என்ன?"

"நாம தாமதமா போறதால பூஜை நடக்கறத பார்க்காம போயிடுவோமா?"

"கவலைப்பட வேண்டாம்... என்கூட கொஞ்சம் தம்கட்டி நடந்தீங்கன்னா உங்களை குறுக்குவழில கூட்டிகிட்டு போயிடுவேன் அவங்கள நாம முந்திடலாம்.."

"இந்த மலைல குறுக்கு வழி எல்லாம் இருக்கா?"

"நான் கண்டுபிடிச்சு வெச்சிருக்கேன். ஆனா ரொம்ப கவனமா வரணும். மிருகங்க கண்ணுல

பட்டாலும் கவலைப்படக்கூடாது... அப்புறமா மலை தேவதை நடமாட்டமும் இருக்கும்."

"தேவதை நடமாட்டம்னா?" என்று கேட்டார்.

"அழகான பொண்ணுங்க தான் தேவதைங்க. அவங்க கண்ணுல பட்றதே அதிர்ஷ்டம்னு ஒரு அபிப்ராயம் உண்டு. வாழ்க்கைல சில விஷயங்கள் நமக்கு கிடைக்க கொடுத்து வெச்சிருக்கணும் அது என்னென்னு தெரியுமா?"

"சொல்லுங்க.."

"நல்லா கேட்டுக்குங்க... மனோ ரஞ்சித மரத்தையும், மகிழம் பூ மரத்தையும் பாக்கறதே புண்ணியம். அடுத்து வலம்புரி சங்கு, காராம்பசு, கர்பிணிப் பொண்ணு - இவங்கள பாக்கறது இன்னும் புண்ணியம்.

காகிதப்பூ மரம், முல்லைக் கொடி, தார் போட்ட வாழைமரம் இந்த மூனையும் ஒரே இடத் துல பாக்கறதும் விசேஷம். அதாவது உங்களுக்கு நல்ல நேரம் இருந்தா மட்டுமே இது கண்ணுலபடும்."

"ஓ.. இப்படி எல்லாம் கூட விஷயம் இருக்குதா?"

"இன்னும் சொல்றேன் கேளுங்க. இதெல்லாம் சாமி சொன்னது. தங்கம் தொலைஞ்சா தொலைஞ் சத போல இரண்டு மடங்கை உடனே வாங்கிடணும். இல்லேன்னா குருங்கற கிரகத்தோட பார்வை குறைஞ்சு போச்சுன்னு அர்த்தம். தங்கத்தை வாங் கிட்டா குருவால குறைஞ்சத சுக்கிரனோட பலத்தால நேர்பண்ணி கிட்டதா அர்த்தம்.."

"அடுத்து யாராவது தண்ணி கேட்டா நமக்கு இல்லைன்னாலும் நமக்கு கேட்டவங்களுக்கு



கொடுக்க நாம முயற்சி எடுக்கணும். அவங்க தண்ணி கேட்கற சாக்குல நம்ம கர்மத்தை கேக்கறதா அர்த்தம். நாம குடுத்து அவங்க தாகம் அடங்கிட்டா அவங்க கிட்ட சேர்ந்த நம்ம கர்மமும் அடங்கிடும்.

அப்புறமா, உப்பு கேட்டாலும் இல்லேன்னு சொல்லக்கூடாது."

"அப்ப மத்த விஷயங்கள இல்லேங்கலாமா?"

"எது நம்ம கிட்ட இல்லையோ அதை தான் இல்லைன்னு சொல்லலாம். இருக்கறத இல்லைன்னா நிஜமாலுமே ஒரு நாள் அது இல்லாம போயிடும்.."

"இதெல்லாமும் சாமி தான் சொன்னாரா?"

"ஆமாம்... அவர் உபதேசத்தை தான் நான் சொல்றேன்" என்றபடியே டார்ச் லைட் ஒளியில் மெல்ல மெல்ல முன்னேறிக் கொண்டிருந்தார் அவர்.

"சரி நான் இப்ப உங்கள ஒரு கேள்வி கேட்க றேன் பதில் சொல்லுங்க..."

"கேளுங்க தெரிஞ்சா சொல்றேன்."

"உலகத்துல காசு பணத்தை தொலைப்பாங்க. நாங்க தங்கம் வைரத்தை கூட தொலைப்பாங்க. இதுக்கு எது பெத்த குழந்தையை தொலைச்சவங்க. இதுக்கு எது காரணம்னு சொல்ல முடியுமா?"

"தாராளமா... குழந்தையை இழக்கறது இரண்டு விதம். ஒண்ணு அது செத்துப் போயிட்றது. இன் னொன்னு அது தொலைஞ்சு போயிட்றது!

செத்துப் போனா துக்கம் பத்து நாளோ இல்ல ஒரு மாசமோ தான். தொலைஞ்சா தான் அந்த

துக்கம் தீராம நெஞ்சுல நின்னு வருத்தம் தரும். பிள்ளை இல்லாத துக்கத்தை நீங்க தினம் தினம் அனுபவிக்கணும்னு விதி இருந்தா மட்டுமே இப்படி நடக்கும். அதே சமயம் தொலைஞ்சு போன குழந்தை நிச்சயம் கஷ்டப்படாம நல்ல விதமா இருக்கும். இது ஒரு கணக்கு.."

பொன்னுசாமி சொன்னது ரத்னத்துக்கும் ஜானகிக்கும் புதிய கோணத்தில் உறைத்தது.

"ஐயா.. இதுக்கு ஒரு முடிவே கிடையாதா?"

"முடிவில்லாத ஒரு விஷயமே இந்த உலகத்துல கிடையாது. எல்லாத்துக்கும் முடிவு உண்டு.."

"அப்ப எங்களுக்கு எப்பய்யா?"

"இதுக்கு பதிலை யோகியால தான் சொல்ல முடியும்."

"சொல்லுவாரா?"

"எப்ப அவரை பத்தி தெரிஞ்சு வந்துட்டீங்களோ அப்ப உங்களுக்கு விடியற நேரம் வந்துட்டதாதான் அர்த்தம்."

"நீங்க இப்படி சொல்றத கேக்கும் போதே மனசுக்கு இதமா இருக்கு."

"காரணமில்லாம காரியமில்லைன்னு யோகி அடிக்கடி சொல்லுவார். ஒரு குப்பையை எடுத்துக்குவோம். இதோ இங்க கீழ ஒரு காலி தீப்பெட்டி கிடக்குது பாருங்க. இது இங்க வந்ததுக்கு பின்னால வரிசையா காரணம் இருக்கு. பெட்டி தீர்ந்து போகவும் ஒருத்தன் தூக்கி போட்டுட்டாங்கறது முதன்மையான காரணம்.



தீர்றதுக்கு முந்தி அது அவன் கிட்ட இருந்தது. அவன் கிட்ட இருக்கறதுக்கு முந்தி அது கடைல இருந்தது. கடைல இருக்கறதுக்கு முந்தி அதை தயாரிச்சவன் கிட்ட அது இருந்தது. அதுக்கு முந்தி தீக்குச்சி மரத்துல இருந்தது. அது மேல இருக்கற பெட்டி பேப்பர் எல்லாமும் மரமாதான் இருந்தது. மரம் தரைல வளர்ந்திருந்தது. அதை ஒருத்தர் வளர்த்து கிட்டிருந்தார்.. இப்படி பின்னாடி போனா ஒரு காரணத்தோட அது போய்கிட்டே இருக்கும். இல்லையா?

"உண்மைதான் சாமி.. எல்லாத்துக்கும் ஒரு காரணம் இருந்தே தீரணும்னு நீங்க சொல்றத நான் ஒத்துக்கறேன். ஒரு காலி தீப்பெட்டிக்கே இப்படி ஒரு வரிசை இருக்கற மாதிரி நாங்க பிள்ளையை தொலைச்சதுக்கும் பின்னாலயும் வரிசையா காரணங்கள் இருக்குன்னு நீங்க சொல்றத ஒத்துக்கறேன். இந்த காரணங்களால மனசு சமாதான மடையமாட்டேங்குதே.."

"அப்ப மனசுக்கு தெளிவில்லை.. அதுக்கு பகுத்தறிய தெரியலைன்னு அர்த்தம்."

"இந்த இடம் மட்டும் புரியல - கொஞ்சம் விளக்கமா சொல்வீங்களா?"

"எனக்கு தெரிஞ்ச அளவுல சொல்றேன். இப்ப ஒருத்தர் சிறைல இருக்கார். ரொம்ப கஷ்டப்பட்றார். பார்க்கவும் பரிதாபமா இருக்குன்னு வெச்சுக்குவோம்..."

"சரிங்க.."

"அவர் பத்து பேரை வெட்டி கொலை செய்தவர்னு தெரிய வருது. அப்ப அந்த பரிதாபம் இருக்குமா?"

"அது எப்படி இருக்கும்... கொலைகாரன் தண்டனை அனுபவிக்கிறான். நல்லா அனுபவிக் கட்டும்னுதான் நினைப்போம்.."

"பாத்தீங்களா - காரணம் தெரியவும் மனசு சமாதான மாயிடிச்சு..."

"உண்மைதான்.. ஆனா இங்க காரணம் தெரிஞ்ச தால சமாதானமாச்சு. எங்க விஷயத்துல நான் நிஜமா ஒரு தப்பும் பண்ணலையே சாமி.

"அது உங்களுக்கு தெரிஞ்சு தானே - தெரியாம தப்பு பண்ணி இருக்கலாம். இல்லையா?"

"தெரியாம ஒரு கண்ணாடிய கீழ போட்டா அது உடையாம போயிடுமா?"

"உங்க கேள்வி புரியுது - ஆனா மனசு ஒத்துக்க தயங்குது கஷ்டப்படுது.."

"தயங்காம இந்த பதிலை புரிஞ்சு ஏத்துகிட் டீங்கன்னா வரவேண்டிய பக்குவம் வந்துடுச்சுன்னு அர்த்தம். ஒத்துக்க தயங்கி வருத்தப்பட்டா உங்க கர்மக் கணக்கு தீரலைன்னு அர்த்தம்..."

"இப்படி எதையாவது சொல்லி சமாதானப் படுத்திகிட்டாதான் உண்டு. வேற வழி..?"

ரத்னம் பெருமூச்சு விட்டார். ஆனால் வாழ்க்கை பற்றிய உண்மைக்கு மிக அருகில் வந்தும் அதை அவர் பிடித்துக் கொள்ள தவறிவிட்டதாகவே



பொன்னுச்சாமிக்கு தோன்றியது. அதற்கு மேல் அவர் பேசவில்லை. அவருக்கு விதி இருந்தால் பகவதி யோகி அவருக்கு பதில் கூறுவார் என்று மட்டும் நினைத்துக் கொண்டார். அதேசமயம் டார்ச் லைட்டும் மங்கத் தொடங்கியது. உள்ளே பேட்டரி வீக்காகி வருவதன் விளைவு!

"கொஞ்சம் எட்டி நடங்க... வெளிச்சம் குறைஞ்சு கிட்டு வருது" என்றார். ரத்னமும் நடக்க முற்பட்டார். அவர் கையை இறுக்கப்பிடித்துக் கொண்டாள் ஜானகி. கசகசவென்று ஈரமாக இருந்தது அவ்வளவு வியர்வை. அந்த நிலையிலும் அதை எண்ணி ரத்னத் திடம் சிரிப்பு வந்தது.

"என்ன உங்களுக்கு நீங்களே சிரிக்கிறீங்க?"

"கையால ஆகாம போகும் போது நம்பளால முடிஞ்சது அதுதானே ஜானகி."

"புரியலியே.."

"ஒரு பிள்ளையை பெத்துக்க தெரிஞ்சது. ஆனா பாதுகாப்பா வெச்சுக்க தெரியல. பாரு - அதுக்காக இப்படி ஒரு ராத்திரில இதுக்கு முந்தி ஒரு தடவை கூட நினைச்சே பாத்துருக்காத இந்த மலை மேல நாம நடந்து கிட்டிருக்கோம். பகல்லையே வரத் தயங்குற இடத்துக்கு ராத்திரி வந்துருக்கோம். நமக்குள்ள தான் எவ்வளவு ஆசை?"

"பிள்ளை வேணும்னு நினைக்கறது ஆசை யோட சேர்ந்த விஷயங்களா?"

"எல்லாமே ஆசையோட சேர்ந்ததுதான்... எனக்கு நீ வேணும்னு நினைக்கறது - உனக்கு நான்

வேணும்னு நினைக்கறதுன்னு எல்லாமே ஆசையோட சேர்ந்தது தான்.

ஆசை ஆசை ஆசை.. எல்லா இம்சைக்கும் இதான் காரணம்."

ரத்னம் பேச்சு திசைமாறி அதில் கோபம் வெளிப்படத் தொடங்கியது.

"எங்கையோ ஆரம்பிச்சு எங்கையோ போயிட்டீங்க.."

"வாஸ்தவம் தான் இப்ப மட்டும் என்ன.. எங்கையோ தான் போய் கிட்டிருக்கோம். என்ன நடக்கும்னுதான் தெரியல.."

"பேசாம வாங்க.. விரக்தில நல்லாவே உளற ஆரம்பிச்சிட்டீங்க.."

ரத்னமும் ஜானகியும் பேசிக் கொண்டு வருவது சில அடிகள் முன்னால் நடக்கும் பொன்னுச்சாமியின் காதுகளிலும் விழுந்து கொண்டுதான் இருந்தது. அவர் முகத்தில் ஒரு மந்தகாசமான சிரிப்பு.

"இதோபார் ஜானகி.. இதுதான் கடைசி!

இந்த கோவில் குளம் - சாமியார் தரிசனம் ஜோசியம் அது இதுன்னு நீ எங்கையாவது கூப்பிட்டே... நடக்கறதே வேற.. தெரிஞ்சிக்க.."

"சரி பேசாம வாங்க.."

"இந்த சாமியும் நமக்கு ஒண்ணும் பெருசா வழிகாட்டிடப் போறதில்ல. இந்த நாட்டுல விஞ்ஞானிகள் இருக்காங்களோ இல்லையோ நிறைய



சாமியார்கள் இருக்காங்க. அவங்களுக்கெல்லாம் ஒரு விஷயம் நல்லா தெரிஞ்சிருக்கு.

நமக்கு ஒரு கஷ்டம்னா அதுக்கு நாம செஞ்ச பாவம் தான் காரணம்னு சொல்றதுக்கு நல்லாவே தெரிஞ்சிருக்கு. இந்த சினிமால தான் மாயமந்திரமா நடந்துக்கறதெல்லாம்... நம்ம வரைல எல்லாமே தந்திரம் தான்."

ரத்னத்திடம் எதனாலோ மனதுக்குள் எதிர் மறையான எண்ணங்களே எழும்பியது. அது பேச்சாக வெளிப்பட்டது.

"இப்ப நீங்க சும்மா வரமாட்டீங்க?" என்று ஒரு அதட்டு அதட்டினாள் ஜானகி. சட்டென்று இருட்டிக் கொண்டது போல இருந்தது. முன்சென்றபடி இருந்த பொன்னுச்சாமியை காணவில்லை.

"ஐயோ என்னங்க இது.. கூட வந்தாரே அவர் எங்கங்க?"

"என்னக் கேட்டா உனக்கு முன்னால தான் நடந்து கிட்டிருந்தார்."

"உங்க புலம்பலை சகிச்சுக்க முடியாம விட்டுட்டு ஓடிட்டாரா?"

ஜானகி இருளில் பதைக்கத் தொடங்கினாள். அப்போது எங்கோ யானைகள் பிளிறும் சப்தம் வேறு...

"ஐயோ காட்டு யானைங்க வர்றமாதிரி இருக்குங்க.."

"மாதிரி இல்ல.. வந்துகிட்டே இருக்குங்க. அப்படியே நில்லு இங்க இருந்து நாம இனி ஒரு அடிகூட வைக்கக் கூடாது."

"அப்புறம் அந்த பூஜையை எப்படி பாக்கறது?"

"அப்படி ஒண்ணு இருக்குல்ல?" - என்று அவர் கேட்ட நொடி அவர் மேல் டார்ச் வெளிச்சம் பலபக்கங்களிலும் இருந்து பட்டது.

"யாரு?"

"நாங்க தான் சார்... பரவால்லியே எங்களுக்கு பின்னால வந்த நீங்க எங்களுக்கு முன்னால வந்து நிக்கறீங்களே?"

"ஓ.... நீங்கல்லாம் இப்பதான் வர்ரீங்களா?"

"ஆமாம்... நடங்க! கிட்ட வந்துட்டோம்."

- நல்லவேளையாக அவர்கள் வழி நடத்தி அழைத்துச் சென்றனர். அவர்கள் சொன்னது போலவே ஒரு பத்து நிமிடத்தில் அந்த சுனைப் பகுதி வந்து விட்டது. சுற்றிலும் நிறைய தீப்பந்தங்கள். சுனையில் தளும்பத்தளும்பத் தண்ணீர். சுனையை சுற்றி பாறைத் திட்டுகள். அதன் மேல் ஸ்டேடியத்தில் இடம் பிடிப்பது போல சிலர் இடம் பிடித்து துண்டு விரித்திருந்தனர். ஆனால் அவர்கள் சொன்ன யோகியை அங்கே காணவில்லை. ஜானகிக்கும் ரத்னத்துக்கும் சற்று ஏமாற்றமாகக் கூட இருந்தது. அவர்களை வழி நடத்தி வந்த பொன்னுசாமி சுனைக்கு அருகே உள்ள ஒரு பாறைத் திட்டை சுனைநீரால் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். நிமிர்ந்து ரத்னம் ஜானகி இருவரையும் பார்த்து ஒரு சிரிப்பு



சிரித்தார். இடையில் எங்கோ யாரோ சங்கு முழங்கும் சப்தம் கேட்டது. எல்லோரிடமும் விடைப்பு தொற்றிக் கொண்டது.

'சாமி வர்றார்... சாமி வர்றார்...' என்று முணுமுணுத்தனர். அந்த கூட்டத்தில் ஒரு பக்கம் இருந்து கூட்டம் விலகியது. இடையில் ஒருவர் வருவதும் தெரிந்தது.

ஐந்தரை அடி உயரம். அந்த அளவுக்கு தலை முடி சடை பிடித்து வளர்ந்து தரையில் உரசியபடி வந்தது. ஜானகிக்கு அந்த காட்சியே சிலிப்பை மூட்டியது.

ரத்னத்துக்கு சற்று வழுக்கைத்தான்.... தடவிப் பார்த்துக் கொண்டார். இந்த அளவுக்கு தலையில் முடி கொட்டாமல் வளர்ந்திருப்பதே ஒரு அதிசயம் போல கருதினார்.

ரத்னத்துக்கும் அவர் ஒரு அதிசயமாகத் தான் தெரிந்தார்.

எல்லோரும் 'ஹர ஹர மகாதேவ' என்று கோஷமிட்டனர். அங்கே ஒரு அதிசயம் நடக்கத் தொடங்கி விட்டது போல் தோன்றியது. பொன்னுச் சாமியே அவருக்கு உதவியாக அவர் சொல்வதை எல்லாம் செய்தார். அவரது தோளில் ஒரு மான் தோலால் தைக்கப்பட்ட பை இருந்தது. அதனுள் இருந்து ஒரு சாண் நீள அகலம் கொண்ட சிவலிங்கம் ஒன்றை அவர் வெளியில் எடுத்தார். அதை சுனைக்கு பக்கத்தில் சுத்தம் செய்து கோலமிடப் பட்டிருந்த பாறை மேல் வைத்து அபிஷேகம் தொடங்கியது. தரிசனம் செய்ய வந்திருந்தவர்கள் பால் கொண்டு

வந்திருந்தனர். சிலரிடம் இளநீர், சிலரிடம் பன்னீர், தேன் என்று அபிஷேக வகையறாக்கள்.

இதைப் பார்க்க வேண்டும்.

இதற்குத்தான் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று சொல்லயிருந்ததால் ஒருவரும் வைத்த கண்ணை எடுக்கவில்லை. ஜானகி உருகிக் கொண்டிருந்தாள். ஆனால் ரத்னத்திடம் அத்தனை உருக்கமில்லை.

இதைப் போன்ற அபிஷேகங்களை எவ்வளவோ பார்த்தாயிற்று. அதைப்போல ஒரு அபிஷேகம் தான் இது. இதில் பெரிதாக என்ன இருக்கிறது? என்பது போல் எண்ணம் அவரிடம். சிறிது நேரத்தில் அபிஷேகம் முடிந்தது.

பகவதி யோகி சித்தர் வரிசையாக எல்லோருக்கும் விபூதிப் பிரசாதம் தரத் தொடங்கினார்.

ஜானகியும் வரிசையில் நின்றாள். ரத்னத்தை கூடவே நிறுத்திக் கொண்டாள். அவர்கள் இருவரும் யோகியை நெருங்கிய சமயம் அவர் பதிலுக்கு சிரித்தார். பக்கத்தில் இடத்தை காட்டி ஒதுங்கி நிற்கச் சொன்னார். எல்லோருக்கும் தந்தது போல பிரசாதத்தை தரவில்லை. அதுவே ஜானகிக்கு படபடப்பை உருவாக்கியது.

ஒருவழியாக மற்றவர்களுக்கு கொடுத்து முடித்தாகி விட்டது. ரத்னத்திடம் ஒரே உட்குடைச்சல். பொன்னுசாமிதான் பக்கத்தில் இருந்து உதவியபடி இருந்தார். எல்லோருக்கும் முடியவும் யோகி பொன்னுசாமிக்கு தானே நெற்றியில் விபூதியை



வைத்து தலையை தடவி புறப்படு என்பது போல பார்த்தார்.

அவர் வார்த்தைக்கு மறுபேச்சு பேசாமல் பொன்னுசாமி புறப்பட்டார். மற்றவர்களும் புறப்பட்டனர். சிலர் பேச வேண்டும் என்று தேங்கி நின்றனர். ஜாடையிலேயே அவர்களை அடுத்த முறை பார்க்கலாம் என்று கூறி அனுப்பிவிட்டார்.

ரத்னத்திடம் பொறுமை போய்விட்டது. “சாமி... கொஞ்சம் எங்கள கவனிங்க...” என்றார் கோபமாக.

“நிறைய பேசணும்னு தான் எல்லாரையும் போகச் சொன்னேன்” என்றார்.

“நிறைய பேசணுமா?”

“ஆமாம்... நிறைய கேள்விகளை கேட்டுருக்கீங்களே....”

“சாமி.... இவர் புலம்பிகிட்டே வந்தாரு.... எல்லாத்துக்கும் ஒரே காரணம். பிள்ளை இன்னும் கிடைக்கலியேங்கற ஒரே காரணம் தான்.”

“தெரியும்... என்னை பார்க்க திருநீர் மலைல இருந்து நிற்காம புறப்பட்டு வந்திருக்கற உங்களுக்கு நானும் ஏதாவது செய்தாதானே நல்லா இருக்கும்?”

“சாமி... எனக்கு என் பிள்ளை கிடைக்கணும். அநியாயமா பறி கொடுத்துட்டு துடிச்சி கிட்டிருக்கோம். தொலைச்சது குழந்தைங்கறதால அடையாளம் கண்டுபிடிக்கறதுல கூட நிறைய சிக்கல்... இப்ப எங்க பிள்ளை திரும்பி வந்தா எங்களாலேயே

அடையாளம் காண முடியாது... அவன் அப்படி வளர்ந்திருப்பான். என்பாசத் துடிப்பு உங்களுக்கு புரியும்னு நினைக்கறேன்"

- ஜானகி கண்ணீர் பெருக்கினாள். யோகியிடம் ஒரு மெல்லிய புன்னகை.

"சாமி... தயவுசெய்து உன்னோட பாவம் இது... அனுபவிச்சு தான் தீர்க்கணும்னு எதையாச்சும் சொல்லாதீங்க. என்னால அதை எல்லாம் கேட்டுக்க முடியாது. உங்க கிட்ட உபதேசம் கேக்கற மன நிலையே இல்லை எனக்கு எந்த உபதேசமும் தேவையில்லை. எனக்கு தேவை என் குழந்தை... அதுக்கு உங்க ஆருடம் என்ன?"

- ரத்னம் ஜானகி போல கண்ணீர் விடவோ உருக்கமாய் பேசவோ விரும்பவில்லை. பட்பட்டென்று தேங்காய் உடைப்பது போல் இருந்தது அவர் பேச்சு.

'பெருந்தன்மையாவும், நேர்மையாவும், குறுக்கு வழியில போகாமலும் இந்த நொடி முதல் நீ இருந்தால் அதிகபட்சம் ஒரு வாரத்துல உனக்கு உன் மகன் கிடைப்பான். உன் கேள்விக்கு ரத்னச் சுருக்கமா என் மனசுல பட்ட பதிலைச் சொல்லிட்டேன். போதுமா?"

- யோகியிடம் இருந்து அப்படி ஒரு பதில் வரும் என்று ஜானகி எதிர்பார்க்கவேயில்லை. முகத்தில் ஒரு பிரகாசம் குபீர் என்று பரவியது.

"சாமி என் பிள்ளை எனக்கு ஒரு வாரத்துல கிடைச்சிடுவானா.... நிஜமாவா?"



"என் மனசுல அந்த ஆதிசிவன் அப்படித் தான் சொல்றான்."

"அது சரி சாமி பெருந்தன்மையா, நேர்மையா, குறுக்குவழில போகாமல்னு என்னென்னமோ சொன்னீங்களே... அது என்ன சாமி?"

"நான் உனக்கு தெரிஞ்ச பாஷைலதானே பேசினேன்... என்னன்னு கேட்டா என்னப்பா அர்த்தம்?"

"அதை இப்ப சொல்ல வேண்டிய அவசியம் என்ன சாமி?"

"போகப் போக அது உனக்கு தானா புரியும்."

"போதும் சாமிகிட்ட வார்த்தைக்கு வார்த்தைன்னு ஏதாவது பேசாதீங்க. சாமி நீங்க சொன்னதை மனசுல வெச்சு நான் நல்லவிதமா நடந்துக்கறேன். எனக்கு ஏழு நாள்ள என் பிள்ளை கிடைச்சா போதும்."

"அடுத்த அமாவாசைக்கு நீ பிள்ளை யோட தான் வருவே...."

- அந்த வார்த்தைகளுக்கு பிறகு அவர் எதுவும் பேசவில்லை. யாருமே இல்லாத அந்த இடத்தை விட்டு சடை தரையில் புரள திரும்பிச் செல்லத் தொடங்கினார்.

ரத்னத்துக்கு ஏதோ கனவு கண்டது போல் இருந்தது.

பொழுதும் விடிய ஆரம்பித்து விட்டது!

# 6

பெரியவரிடம் அன்பே வடிவான கடவுளின் கரங்களில் ஆயுதம் எதற்கு என்ற கேள்விக்கு முதலில் பெரியவர் பதில் கூறத் தொடங்கினார்.

ஆயுதம் என்பது இங்கே பாதுகாப்பைக் குறிக்கின்றது. நம் நாட்டின் எல்லைப் புரத்தில் ராணுவ வீரர்களின் கரங்களில் ஆயுதம் இருக்கிறது. அவர்களை நாம் வன்முறையாளர்களாக பார்ப்பதில்லை. அவர்களைப் பார்க்கும் போது நமக்கு ஒரு தைரியம் வருகிறது. அவர்களால்தான் ஒரு தேசம் எதிரிகளால் ஆக்ரமிக்கப்பட்டாலும் பாதுகாப்பாக உள்ளது. அவர்களை வீரர்கள் என்றுதான் கூறுகிறோம். கடவுளின் கையில் உள்ள ஆயுதமும் உனக்கு நான் இருக்கிறேன். உன் எதிரிகளை நான் வதம் செய்வேன் என்று சொல்லத்தான்... எனவே இதை எப்படிப் பார்க்கிறோம் என்பதில் தான் எல்லாமே இருக்கிறது. அடுத்து கர்ம வினைகள்! நாம் செய்யும் செயல்களைத் தான் கர்மவினை என்கிறோம். இதில் இன்பத்தை தருவது நல்வினை - துன்பத்தை தருவது தீவினை... இந்த இரண்டுமே நம்மை விடாது... நிழல் போல கூடவே வரும். சிலர் செய்த பாவ புண்ணியங்களை அவர்கள் எடுத்த பிறவிக்குள் அனுபவித்து தீர்க்க ஆயுள் இல்லாமல் போகும் போது அவர்கள் அடுத்த பிறப்பெடுத்து அதை அனுபவித்து தீர்க்க வேண்டும். அப்படித்தான் ஒவ்



வொருவர் வரையிலும் நடக்கிறது என்ற பெரியவர் கேள்வி கேட்ட அந்த மேல் நாட்ட வரை பக்கத்தில் உள்ள பிரசவ ஆஸ்பத்திரிக்கு அனுப்பி அங்கு பிறக்கும் குழந்தைகளை கவனித்துவிட்டு வரச் சொன்னார்!'

□□□

**மணி ஒன்பது**

குழந்தை மகேந்திரன் பள்ளிக்கூடத்துக்கு செல்ல தயார் ஆகிக் கொண்டிருந்தான். யூனி ஃபார்ம் போட்டு ஷூவை மாட்டுவதற்குள் சோபாவை நூறு சுற்று சுற்றி வந்து விட்டான். மாதவிக்கு நுரைதள்ளப் பார்த்தது. மாடியின் கைப்பிடி வளைவு மேல் கை வைத்துக் கொண்டு அதையே பார்த்தபடி இருந்த ராம்குமாருக்கு நேற்றைய போன் காலின் இன்றைய விஸ்வரூபம் எப்படி இருக்குமோ என்கிற கேள்விதான் மனதில் பிரதானமாக இருந்தது. இந்த விஷயத்தை விஸ்வநாத்திடம் பேசிவிடுவதுதான் சரி என்றும் தோன்றியது. அப்படி நினைத்தபோதே அருகில் விஸ்வநாத்தும் வந்து நின்றான்.

“என்ன ராம்... ஏதாவது பிரச்சனையா?” கச்சிதமாக கேட்டான்.

“ஆமாம் விஷ்வா....”

“மனசுல வெச்சுகிட்டிருந்தா சரி ஆயிடுமா... இந்த உலகத்துல தீராத பிரச்சனைன்னு எதுவுமே இல்லையே....”

“நம்ம வரைல இது தீராத பிரச்சனைதான் விஷ்வா....”

"அப்படி என்ன பிரச்சனை....?"

"வீட்ல வெச்சு பேச வேண்டாம். வெளிய போவோமா?"

"ஓ... அந்த அளவுக்கு சீரியஸயா...?"

"நிச்சயமா..."

"அப்பசரி.... புறப்படு...."

இருவரும் உடைமாற்றிக் கொண்டு ஒன்றாக புறப்பட்டனர். மகேந்திரனும் ஸ்கூல் யூனிஃபார்மில் லஞ்ச் பேக்குடன் பள்ளிக்கு செல்ல காரில் ஏறியிருந்தான். டிரைவர் காரை எடுக்கப் போகும் சமயம் ராம்குமாருக்குள் ஒரு பொறி.

"டிரைவர்... இன்னிக்கு மகேந்திரன் ஸ்கூலுக்கு போக வேண்டாம்..."

"ஐய்யா... திடீரின்னு இப்ப சொல்றீங்களே..."

"காரணமெல்லாம் கேட்காதே..... பல இடங்கள்ள நிலநடுக்கமா இருக்கு. நியூஸ்ல சொன்னான். அதனால ஒரு சேஃப்டிக்கு சொன்னேன்." என்று தோன்றிய பொய்யைச் சொல்லிவிட்டு விஷ்வாவுடன் தங்களின் காரில் ஏறினான். விஷ்வா முகத்தில் பலத்த சலனம்.

கார் சீறத் தொடங்கியது.

"ராம் ... எதனால மகேந்திரனை ஸ்கூலுக்கு போக வேண்டாம்னே...."

"அவன் தானே இப்ப நம்பளோட தீர்க்க முடியாத பிரச்சினை..."

"டென்ஷன் பண்ணாம விபரமா சொல்லு...."



"யார்னுதெரியல... ஒருத்தன் மகேந்திரன் யார்னு சரியா சொல்லி 10 கோடி கேட்டு பிளாக் மெயில் பண்ண ஆரம்பிச்சிருக்கான்...."

"மைகாட்... நிஜமாவா?"

"ஆமாம்... நேத்து மட்டும் அஞ்சு ஆறுமுறை பண்ணிட்டான்."

"அதான் ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வெச்சிருந்தியா?"

"எனக்கு வேற வழி தெரியல..."

"நீ யார் கிட்டையாவது சொல்லியிருக்கியா?"

"என்ன உளற்றே... மகேந்திரனை பத்தின உண்மைங்கறது என் குடும்ப மானம், மாதவியோட உயிர்னு பல விஷயங்கள் சம்மந்தப்பட்டது. நான் போய் சொல்வேனா?"

"நானும் சொல்லல... நீயும் சொல்லல... அப்ப அவனுக்கு எப்படி தெரியும்?"

"முதல்ல அவன் யார்னு சொல்லு."

"தெரியாது... ஒவ்வொரு தடவையும் பப்ளிக் பூத்ல இருந்து பேசறான். ரொம்ப எச்சரிக்கையா இருக்கான். அசர மாட்டேங்கறான். பத்துகோடி ரூபா கேக்கறான். தர முடியாதுன்னா உண்மையை போட்டு உடைப்பேங்கறான்..."

ராம் குமார் விளக்கத்தை தொடர்ந்து விஷ்வநாத்திடம் ஒரு ஆழ்ந்த மௌனம்.

"என்ன மௌனமாயிட்டே?"

'இது எப்படி சாத்யம்னு யோசிக்கிறேன். 4 வருஷத்துக்கு முந்தி நீ குழந்தையோடு வந்தப்ப இதை அனாதை குழந்தைன்னே ஆனா இரண்டு நாள்ளயே இது அந்த ரத்னம் குழந்தைன்னே...அப்பவே பெருசா பயந்தேன். ஆனா அப்ப நடக்காத விபரீதம் இப்ப நடக்கும் போல இருக்கே?"

"திரும்பவும் சொல்றேன்.... நம்ம அவசரத் தேவைக்கும் நான் அந்த வடநாட்டுகாரனை நம்ப வேண்டி வந்தது. அவன் இந்த ரத்னம் குழந்தையை தூக்கிட்டு வந்து தருவான்னு எனக்கு தெரியாது. மறுநாள் பேப்பர்ல குழந்தை கடத்தல்ங்கற நியூசைப் பார்த்துட்டு அவங்கிட்ட கேட்டப்போ ஒத்து கிட்டான். அப்பதான் தப்பு நடந்ததே தெரியும். குழந்தையை திருப்பி தந்துடலாம்னா அவன் ஆக்சி டென்ட்டுல செத்துப் போயிட்டான். இதனால வேற வழி இல்லாம மனசை திடப்படுத்திகிட்டு குழந் தையை வெச்சுக்க வேண்டி வந்தது. இங்க இருந்தா ஒரு வேளை யாராவது குழந்தையை அடையாளம் தெரிஞ்சுக்கலாம்கற பயத்துல அப்ப நீயும் குழந்தை யோட வெளிநாட்டுக்கு போயிட்டு ஆறுமாசம் கழிச்சு தான் வந்தீங்க. பிரச்சினையும் மெல்ல அமுங்கிப் போச்சு. குழந்தையும் வளர்ந்துட்டதால யாரும் அடையாளம் கண்டுபிடிக்கற ஆபத்தும் இல்லாம போச்சு.

உன் அப்பாவும் பேரன் பேர்ல உயிலை எழுதிட் டாரு. இதனால நாம விரும்பினாலும் குழந்தையை கொடுக்க முடியாத நிலை உருவாயிடிச்சு. மாதவியும்



குழந்தை மேல் உயிரையே வெச்சு நம்பளை கட்டிப் போட்டுட்டா. இதுதான் நம்மநிலையோட யதார்த் தம்."

- ராம் குமாரும் மூச்சு விடாமல் நடந்து முடிந் ததை சொல்லி ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

"சரிராம்... இப்ப இந்த பிரச்சனைக்கு முடிவான தீர்வு என்ன?"

"பணம் கொடுத்தால்லாம் இது முடியாது. திரும்பத் திரும்ப கேக்கமாட்டாங்கறதுக்கு உத்தர வாதம் இல்லை."

"அதனால?"

"பணம் கேக்கறவன் யாருங்கறத தெரிஞ்சு கிட்டு அவனை போட்டுத் தள்றது ஒண்ணு தான் ஒரே தீர்வு."

- ராம்குமார் சொன்ன மறு நொடி கார் கிரிச்சிட்டு தேய்ந்து நின்றது. விஷ்வநாதனிடம் அந்த அளவு அதிர்ச்சி....!

"என்ன பயமா இருக்கா?"

"பின்ன.... கொலை என்ன சாதாரண விஷயமா? எப்படி ராம் இப்படி உன்னால பேச முடியுது?"

"சரி வேற என்ன வழின்னு நீயே சொல்..."

"பணத்தை கொடுத்து வாயை அடைப்போம். ஏன்னா நாம தப்பு பண்ணியிருக்கோம். வெளிய தெரிஞ்சா மானக்கேடுமட்டுமில்ல ஆயுள் தண்ட னையே கூட கிடைக்கலாம்."

"பணத்தைக் கொடுக்கறதால வாய் அடையும்னா தாராளமா கொடுக்கலாம். ஆனா நான் அப்படி நடக்கும்னு நம்பலை...."

"குழப்பாதே ராம்... கொலைங்கறது டூமச்! முதல்ல குழந்தை திருட்டு - அடுத்து கொலைன்னா ஐய்யோ நான் தொழிலதிபரா இல்லை கிரிமினலா?"

"இந்த கேள்விக்கெல்லாம் இப்ப இடமே இல்லை. நீ எப்பவும் தொழிலதிபர்தான் விஷ்வநாத். என் தங்கையோட நீ இப்ப எப்படி சந்தோஷமா இருக்கியோ அதே மாதிரி சந்தோஷமா வாழணும். இந்த பிரச்சினையை என் கிட்ட விட்டுடு. நான் பாத்துக்கறேன்...."

"நீ எப்படி பார்த்துப்பே?"

"அதை நான் உன்கிட்ட சொல்ல விரும்பலை. அது என் பிரச்சனை"

"நோ... நீ எந்த கிரிமினல் வேலைலயும் இறங்கக் கூடாது."

"நிச்சயமா அப்படி நடந்துக்க மாட்டேன் - அதே சமயம் இந்த பிரச்சினையை தந்திரத்தால எப்படி தீர்க்கணுமோ அப்படி தீர்ப்பேன்."

- ராம்குமாரின் தெளிவை எச்சரிப்பது போல அவன் செல்போனில் அழைப்பொலி.

"அந்த ராஸ்கல்தான்" - என்ற படியே காதைக் கொடுத்தான் அவனும் பேசினான். ராம்குமாரும் காரை ஓரம்கட்டினான்.



"என்ன ராம்குமார்... உன் மாப்ளை கிட்ட …ல்லா விஷயத்தையும் சொல்லிட்டே போல இருக்கு....?"

'இதோ பார் உன் பத்து கோடி ரெடியா இருக்கு... வந்து வாங்கிட்டு போற வழியை பார்..."

"அப்ப பணம் தர தயாராயிட்டே....?"

"ஆமா... உனக்கு தேவை பத்து கோடி. தயாரா இருக்கு."

"குட்..... இதுதான் நல்ல பிள்ளைக்கு அழகு..."

"உன் பாராட்டை தூக்கி போடு. இப்ப நான் கேக்கற கேள்விக்கு பதில் சொல். இந்த உண்மை உனக்கு எப்படி தெரியும்?"

"நீ தான் சொன்னே?"

"நான் சொன்னேனா - என்ன உளற்றே?"

"இரண்டு நாளைக்கு முந்தி பாருக்கு வந்திருந்தியா?"

"வந்திருந்தேன்"

"சரக்கடிச்சியா?"

"ஃபுல்லா சரக்கடிச்சேன் - ஒரு மிலிட்டரிகாரன் சரக்கடிக்கறது ஒரு பெரிய விஷயமா?"

"ஆமா... சரக்கடிக்கறது ஒரு பெரிய விஷயம் இல்லை. அப்ப உளறாம இருக்கணும் அதுதான் பெரிய விஷயம்."

"சரக்கடிக்கறது ஒரு பெரிய விஷயம் இல்லை. அப்ப உளறாம இருக்கணும் அதுதான் பெரிய விஷயம்."

"என்ன சொல்றே நீ?"

"சரக்கடிச்ச உன்னை நான் தான் தூக்கிட்டு போய் உன் வீட்ல விட்டேன். உன்னை கார்ல போட்டு தூக்கிட்டு வரும் போது நீ என்னை கொன்னுடு வேன்னு சொன்னே... பதிலுக்க மூடிகிட்டுவான்னு நான் சொன்னேன். பேச்சு முத்தினுச்சு. அப்ப நீ நான் யார் தெரியுமான்னு கேட்டு என்னோட தில் யாருக் கும் வராதுன்னு சொல்லி இந்த விஷயத்தையும் சொன்னே... குடி குடியை கெடுக்கும்கறதுக்கு நீ நல்ல உதாரணம்.' - அவன் சொல்லி முடித்தான்.

ராம்குமாரிடம் ஒரு கனத்த மௌனம்.

"என்ன ராம்குமார்... இப்படி போய் உளறிக் கொட்டிட்டோமேன்னு நினைச்சு வருத்தப் பட்றியா?"

"எப்படி வருத்தப்படாம இருக்க முடியும். ஆமா உன் பேரையே சொல்லலியே..."

"எதுக்கு சொல்லணும்?"

"அப்ப பேரை சொல்ல மாட்டே - ஆனா நான் உனக்கு பணம் மட்டும் தரணும்."

"பேரும் சொல்ல மாட்டேன் - ஆளும் நேர்ல வரமாட்டேன். நான் யார்னு உனக்கு தெரிய வேண்டிய அவசியமும் இல்லை. பணம் வந்தா என் பேச்சு நிக்கும். இல்லை...."

- அவன் மறுபுறமாக சிரித்தான். ராம்குமார் முகத்தில் பலமான மாறுதல்கள். கவனித்த படியே இருந்த விஷ்வநாத்திடம் பதட்டம்.

"என்ன ராம்... என்ன சொல்றான்?"



"சொல்றேன்... டேய் நீ என்ன ரொம்ப புத்தி சாலிங்கற நினைப்பா உனக்கு. என்னடா பேசறே நீ?" ராம்குமாரிடம் கோபம் வெடித்தது.

"அலறாதே ராம்குமார். உன்னோட கிரிமினல் வேலை முன்னால என் கிரிமினல் வேலை எல்லாம் சும்மா...! நீ அந்த கோடீஸ்வரன் தாமோதரனையே ஏமாத்தியிருக்கே...? ஊரான் குழந்தையை அந்த ஆள் தன் பேரன்னு நினைச்சுகிட்டு சொத்தை எழுதி வெச்சிருக்கான்... அதுவும் ஏதோ சில லட்சம் இல்ல, ஐநூறு கோடிக்கு பக்கமா..."

பாவம் அந்த ரத்னமும் அவன் மனைவியும்...

உள்ளூர்லயே குழந்தை இருந்தும் அது எங்க இருக்குன்னு தெரியாம கோவில் கோவிலா ஏறி இறங்கியிருக்காங்க. நீ அரசாங்கத்தை ஏமாத்தி யிருக்கே - சட்டத்தை ஏமாத்தியிருக்கே. எல்லாத் துக்கும் காரணம் உன்னோட சுயநலம்.

நீ கத்தக்கூடாது.

மூடிகிட்டு என் பேச்சை கேட்கணும்."

"கேட்கலைன்னா....?"

"திரும்ப முருங்கை மரம் ஏறப் பாக்கறியே... நீ இனி சரிப்பட்டு வரமாட்டே... உன்னை சிக்கல்ல விட்டாதான் சரிப்பட்டு வருவே. அதேசமயம் என்னால இந்த பத்து கோடியை வேற விதத்துல சம்பாதிக்க முடியும். நான் எப்படி சம்பாதிக்கறேன்னு பார். இனி நான் உன் கூட பேசமாட்டேன். பேச வேண்டியவங்க பேசுவாங்க. குட்பை."

- அவன் போன் முற்றுப் பெற்றது. ராம்குமார் முகம் இருண்டு போனது.

"ராம்... என்னதான் நடக்குது - அவன் என்ன சொல்றான். ஸ்பீக்கர் போனையாவது போடு - நானும் கேக்கறேன் - நானும் பதில் சொல்றேன்..." - விஷ்வநாத் டென்ஷன் எகிற ராம்குமார் தோளை உலுக்கினான்.

"இல்ல விசு... அவன் கட் பண்ணிட்டான்."

"சரி என்ன சொன்னான்?"

"ரொம்ப க்ளவரா மூவ் பண்றான். பேரை சொல்லமாட்டேன்னான். ஆளும் நேர்ல வர மாட்டேன்னான். இப்ப நான் வேறவிதமா இந்த பத்து கோடியை சம்பாதிச்சுக்கறேன்னு சொல்லிட்டான்."

"வேற விதமான்னா?"

"அது எப்படி எனக்கு தெரியும்?"

"இடியட்... இந்த பிரச்சனை ஏன் இப்படி இழுத்துகிட்டே போகுது...?"

"ஒண்ணும் பண்றதுக்கில்ல விசு... நாம தப்பு பண்ணியிருக்கோம். வசமா மாட்டிக்கிட்டிருக்கோம். இது தலை எழுத்து."

"மண்ணாங்கட்டி... எல்லாம் உன்னால?"

- விசுவிடம் இருந்து வரக்கூடாத அந்த வார்த்தை வந்தே விட்டது. ராம்குமார் ஆழமாக அதே சமயம் மிக அழுத்தமாக விஷ்வநாத்தை ஊடுருவினான்.



"என்ன பாக்கறே? நான் சொன்னதுல என்ன தப்பு?"

"தப்பு இல்ல... நீ சொன்னது ரொம்ப சரி. நான்தான் காரணம். ஒரு தப்பை பண்ணிட்டு ஒருத்தன் தப்பிக்கவே முடியாதுன்னு பல பேர் பல தடவை சொன்னப்ப புரியாதது இப்ப நீ கேட்ட ஒரு கேள்வியில புரிஞ்சு போச்சு."

"இதோ பார்.... இது தத்துவம் பேசற நேர மில்லை. நானும் உன்னை புண்படுத்தறுத்துக்காக சொல்லலை. அது என்னை மீறி வந்துடுச்சி. நாம இந்த பிரச்சினையை எப்படியாவது சுமுகமா முடிச்சாகணும்."

"நான் என்னமோ அதுக்கு எதிரா இருக்கற மாதிரி பேசறியே விசு."

"எதிரா இல்லாம தானா அவன் போனை கட் பண்ணிட்டு நான் வேற விதமா பாத்துக்கறேன்னு சொன்னான்."

"இதேபார் நாம பணம் கொடுக்க தயார் ஆயாச்சு. ஆனா அவன் நேர்ல வரமாட்டானாம் - பேரையும் சொல்ல மாட்டானாம். இப்படிப் பட்டவ னுக்கு எந்த நம்பிக்கைல பணத்தை கொடுக்கறது?"

"கொடுத்து தொலைப்போம் - ஏதாவது குப்பைத் தொட்டியில பணத்தை போடச் சொன்னா கூட போடுவோம். இவன் நம்மை விட்டா போதும்...."

"இவன் விடமாட்டான்.. தொடர்ந்து தொல்லை கொடுத்துகிட்டே இருப்பான். தேவைப்படும் போதெல்லாம்னு இல்லாம தோன்றப்ப எல்லாம்

கேட்பான். கொடுத்து கிட்டே இருக்க முடியுமா - யோசி....”

“அதுவும் சரிதான்... சரி என்ன தான் செய்யலாம்?”

“அவன் அடுத்து என்ன செய்யறான்னு பார்ப் போம்...”

“ஏடாகூடமா ஏதாவது பண்ணி வெச்சா?”

“ஒண்ணும் பண்றதுக்கில்லை. ஆனா அவன் நம்மை அவ்வளவு சுலபத்துல விடமாட்டான். போலீசுக்கும் நிச்சயமா போக மாட்டான். ஏன்னா அங்க போனா நியாயம் கிடைக்கலாம். அவனுக்கும் பணம் கிடைக்காதே...”

“அப்ப அவன் நிச்சயம் திரும்ப போன் பண்ணுவான்னு சொல்றியா?”

“டெஃபனட்டா பண்ணுவான்”

“அவன் யாருன்னு தெரிஞ்சாலாவது பரவா யில்லை... இப்படி ஒளிஞ்சுகிட்டு நிழல் யுத்தம்ல நடத்தறான்.... ச்சே!”

“விசு.... பொறுமையா இருக்கறத தவிர நமக்கு இப்ப வேற வழி இல்லை....”

- ராம்குமார் சொல்லி வாய் மூடக்கூட இல்லை. அவனிடம் இருந்தே திரும்பவும் அழைப்பு.

“என்ன ராம்குமார் நான் போட்ட போடுல ரொம்ப பயந்துட்டியா?”

“வெட்டிப் பேச்சவிடு - விஷயத்துக்குவா. நீயாரா இருந்தாலும் சரி. நேர்ல வா. பத்து கோடி



இல்ல. ஐம்பது கோடி தரேன். பிரச்சினையை ஒரே செட்டில் மென்ட்டுல முடிச்சுக்க விரும்பறேன். நீ தொடர்ந்து பிளாக்மெயில் பண்ணக் கூடாதுன்னும் எதிர்பாக்கறேன்.”

“அப்ப பணம் கொடுக்க தயார் ஆயிட்டேன்னு சொல்லு...”

“ஆமாம். உப்பை தின்னுட்டோம். தண்ணி குடிச்சுதானே தீரணும்?”

“குட்... உன்னோட இந்த அப்ரோச் எனக்கு பிடிச்சிருக்கு. நான் உன்னை கூப்பிட்டு சொல்றேன். இரண்டுபேரும் வெயிட் பண்ணுங்க.”

- போன் கட் ஆனது. ‘உஸ் அப்பாடா...’ என்று ராம்குமாரிடமும் பெருமூச்சு.

“என்ன ராம்... என்ன சொல்றான்?”

“வழிக்கு வந்துட்டான். நேர்ல சந்திக்கற நேரத்த அப்புறமா சொல்றானாம்...”

“கடவுளே... தேங்க்ஸ் - அப்ப இந்த பிரச் சினையை நாம நேர்ல பேசி பணத்தை கொடுத்து செட்டில் பண்ணிடலாம். அப்படி தானே?”

“அப்படியே தான்...”

“போதுண்டா சாமி - போதும்... எங்க இது வெளிய தெரியவந்து மானக்கேடாகி என் அப்பாவும் என்னை தெருவுல நிறுத்திருவாரோன்னு என் னென்னமோ கற்பனை செய்துட்டேன்...”

“நானும்தான்... என் கவலை பணமோ, சட்டமோ, தண்டனையோ எதுவுமில்லை...உன்

அப்பாதான்! யார் பெத்த பிள்ளைக்கோவா நான் சொத்தை எழுதி வெச்சேன் ஐய்யோன்னு அவர் வெடிச்சா அவ்வளவுதான். அவ்வளவு சொத்தும் கோவிலுக்கு போய் நீயும் நானும் ஜெயிலுக்கு போய், மாதவிக்கு பைத்தியம் பிடிச்சு அவ ஆஸ்பத்திரிக்கு போய், கடைசில குழந்தை மகேந்திரன் கதறி அழறத என்னால நினைக்கவே முடியல விசு...."

"நோ... இதை எல்லாம் ஞாபகப்படுத்தாதே...

எனக்கே அதை நினைக்கப் படிக்கல. பைதபை இங்க நாம பேசிகிட்ட எதுவும் மாதவிக்கும் தெரிய வேண்டாம்..."

- விஷ்வநாத் பதட்டத்தோடு பேசியபடியே காரின் டேஷ் போர்டில் இருந்த டிஷ்யூ பேப்பரை எடுத்து வியர்த்து வடிந்த முகத்தை துடைத்துக் கொண்டான். ராம்குமாரும் காரைக் கிளப்பத் தொடங்கினான்.

## 7

அந்த பிரசவ ஆஸ்பத்திரியில் அன்று நான்கு குழந்தைகள் பிறந்திருந்தன. ஒரு குழந்தை நல்ல எடையோடு பிறக்கும் போதே கொழுக்மொழுக்கென்று இருந்தது. ஒன்று மிக சவலையாக கருப்பாகவும் இருந்தது. இன்னொரு குழந்தை பிறக்கும் போதே ஊனம். உதடு பிளந்து பார்க்கவே கோரமாக இருந்தது. இன்னொன்னு இன்கு பேட்டரில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தது.



அந்த வெளிநாட்டவர் நான்கு குழந்தைகளைப் பார்த்துவிட்டு பெரியவரிடம் வந்தார். பெரியவர் அவரிடம் குழந்தைகள் பற்றி கேட்டார். அவரும் தான் பார்த்ததை அப்படியே சொன்னார். பதிலுக்கு பெரியவர் அவரிடம் திருப்பிக்கேட்டார்.

"இந்த குழந்தைகளை எல்லாம் படைத்து யார்?"

"வேறு யார் - கடவுள் தான்..."

"அதில் ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?"

"நிச்சயமாக இல்லை."

"சரி... கடவுள் எப்படிப்பட்டவர்?"

"எங்கள் கடவுள் அன்புமயமானவர். தன் ரத்தத்தாலேயே பாவ விமோசனம் அளித்தவர்."

"உங்கள் கடவுளும் சரி - எங்கள் கடவுளும் சரி - ஒருவரே! கடவுள் எப்படி பலபேர் ஆக இருக்க முடியும்?"

"ஆனால் வழக்கத்தில் யேசு - அல்லா - விஷ்ணு என்று உள்ளதே?"

"அது வழக்கத்தில் தானே - நிஜத்தில் அல்லவே."

"அப்படியானால் எங்கள் ஏசுவை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?"

"நீங்கள் ஏசுவாக கருதுபவரைதான் நாங்கள் சிவம் என்றும் விஷ்ணு என்றும் அழைக்கிறோம். கடவுளுக்கு பெயர் எதுவாக இருந்தால் என்ன..... கடவுள் கடவுள் தானே?"

"நிச்சயமாக...."

“அப்படிப்பட்ட கடவுள் அன்புமயமானவரும் அல்லவா?”

“நிச்சயமாக... அவர் அன்பானவர் - அருளாளர் - கருணைக் கடல்.”

“அப்படிப்பட்டவர் குழந்தைகளை படைக்கும் போதே எதற்காக ஒன்று கருப்பாய், ஒன்று ஊனமாய், ஒன்று சவலையாக என்று படைக்க வேண்டும்?”

- பெரியவரின் கேள்வி முன் அந்த வெளி நாட்டவர் எதுவும் பேசாமல் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டார்!

“கடவுள் தான் நம்மைப் படைத்தார். இப்படித் தான் வாழ வேண்டும் என்று வேதங்கள் மூலமாக சொல்லியும் தந்தார். ஆனாலும் நாம் பாவம் செய்யாமல் வாழ முடிகிறதா என்றால் முடிவ தில்லை. அப்படி நாம் செய்த பாவங்களும் புண்ணியங்களுமே நம்மை வழி நடத்தவும் செய்கின்றன. அதை நாம் அனுபவித்தபிறகே நமக்கு பிறவியிலிருந்தும் விடுதலை கிடைக்கிறது. ஆகையால் ஒருவன் கருப்பாக, ஒருவன் சிகப்பாக ஒருவன் பணக்காரனாக ஒருவன் ஏழையாக பிறப்பது என்பதெல்லாம் கடவுள் சித்தத்தால் அல்ல. தம்தம் கர்மவினையால்!

ஒரே பிறப்பில் அனுபவித்து தீர்க்க முடியாத வினைகளை மறுபிறப்பெடுத்தே தீர்க்க முடியும். அதனால்தான் எந்த முயற்சியும் செய்யாத ஒருவன் இன்பமாக இருப்பதும் எவ்வளவு முயன்றும்



ஒருவன் முன்னுக்கு வர முடியாமல் போவதும் போன்ற மாறுபடுகள், மற்றும் ஏற்றதாழ்வுகள் இந்த உலகில் நிலவுகிறது”

- என்று பெரியவர் நீண்ட விளக்கம் அளிக்கவும் அந்த வெளிநாட்டவரிடம் மறுபேச்சே இல்லை உங்கள் கருத்து அசைக்க முடியாததாக இருக்கிறது என்று மட்டும் கூறினார்!”

❑❑❑

பங்களாவில் மாதவி பூஜையில் இருந்தாள். மாதவி பூஜிக்கும் போது வீடே கோவிலாகி விடும். சாம்பிராணிப் புகைக்குள் வீடே மூழ்கி விடும்.

பள்ளிக்கு போயிராத மகேந்திரன் அவள் போட்ட தூபப் புகைக்குள் ஓடி ஓடி வந்து அதை கலைத்து விட்டு விளையாடிக் கொண்டிருந்தான். அவனது விளையாட்டு சாமான்கள் ஹாலில் அங்கும் இங்குமாய் இறைந்து கிடந்தன. ஹாலில் அமர்ந்து பேப்பர் படிப்பதற்காக தன் அறையை விட்டு வந்திருந்த தாமோதர் அவன் விளையாட்டை கூர்ந்து பார்த்தபடி இருந்தார்.

ஓடிவந்து “ஓய் தாத்தா....” என்று அவர் மேல் விழுந்து எழுந்தெல்லாம் ஓடினான். ஏனோ அவரிடம் சுரத்தில்லை.

“எங்கம்மா உங்க அண்ணன்?” - என்று மாதவியிடம் கேட்டுவிட்டு லேசாக இறுமினார்.

“அண்ணனும் அவரும் ஒண்ணா வெளிய போனாங்க மாமா...

ஆமா உங்களுக்கு உடம்பு சரியில்லையா....?”

"ஆமாம்மா.... உடம்பும் சரியில்லை.... மனசும் சரியில்லை...."

"மனசு சரியில்லையா? என்ன மாமா சொல்றீங்க....?"

"விஷ்வாவுக்கு விருது கிடைச்சிருக்குன்னு கேள்விப்பட்டேனே...."

"ஆமாமா மாமா - அவர் உங்க கிட்ட சொல்லையா?"

"சொன்னாம்மா.... ஆனா சொன்ன விதம் தான் சரியில்லை...."

"எப்படி மாமா சொன்னார்?"

"எனக்கு போய் எஸ்.எம்.எஸ். அனுப்பறான். அவனும் சொல்லலை. நீயும் சொல்லலை. உங்க வரைல நான ஒரு மூலைல கிடக்க வேண்டிய கிழவன் ஆயிட்டேன் இல்ல....?"

- தாமோதரிடம் ஒரு மெல்லிய கோபம் அரும்பியது... அதை மாதவி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

"ஐயோமாமா அவர் எதாவது முக்கிய வேலையா இருந்து சொல்ல மறந்துருப்பாரு..."

"நீ உன் புருஷனை விட்டுத் தருவியா.... பேசு - ஆனா எனக்கு உங்க அவ்வளவு பேரையும் நல்லா தெரியும்கறத மறந்துடாதே...."

- தாமோதர் எழுந்து இருமிக் கொண்டே அவரது அறை நோக்கி செல்லத் தொடங்கினார்.



ஒரு ஐந்து நிமிடத்தில் விஷ்வநாத்தும், ராம்குமாரும் உள் நுழைந்தனர். வந்தவர்களை கோபமாய் பார்த்தாள் மாதவி. ஆனால் அதை எல்லாம் சட்டை செய்யும் மனநிலையில் இருவருமே இல்லை. நேராக ராம்குமாருடைய அறைக்குள் நுழைந்து கதவையும் சாற்றிக் கொண்டனர்.

பின்னாலேயே செல்வது தெரியாமல் சென்றாள் மாதவி!

உள்ளே நுழைந்த வேகத்தில் ராம்குமார் விஷ்வநாத்திடம் "விஷ்வா.... நீயும் மாதவியும் குழந்தையோட முதல்ல ஏதாவது ஒரு வெளிநாட்டுக்கு புறப்பட்டப்பாருங்க. இங்க இவனை நான் பாத்துக்கறேன்" என்று கூறுவது காதில் விழுந்தது.

"அப்படி எல்லாம் உடனே போக முடியாது ராம். இங்க இண்டஸ்ட்ரில் நான் இருந்து முடிக்க வேண்டிய அசைன்மெண்ட்ஸ் ஒரு மலைக்கு மேல் இருக்கு...."

"அது என்னிக்கு தான் இல்லை! ஆனா இப்ப இருக்கற சிச்சுவேஷன்ல குழந்தையோட நீங்க இல்லாம இருக்கறதுதான் சரி..."

"அப்படி எத்தனை நாளைக்கு?"

"ஒரு ஆறுமாசத்துக்கு...."

"நோ.... ஆறு நாளைக்கே இங்க எனக்கு வழி கிடையாது. லுக்... அவனை பணத்தால அடிக்கறது தான் ஒரேவழி. நீ எங்களுக்காக தேவையில்லாம கஷ்டப்படாதே...."

“விஷ்வா... நான் ஒரு ரிடையர்ட் கேஸ் - எனக்கு பெண்டாட்டியா பிள்ளையா? ஆனா நீ அப்படி இல்ல. உனக்கு எராளமான ரெஸ்பான்ஸ் இருக்கு. உன் கௌரவத்துக்கோ புகழுக்கோ ஒரு துளி பங்கமும் வரக்கூடாது. அதுக்கு என்ன செய்யணும்னு எனக்கு தெரியும்....”

- ராம்குமாரும், விஷ்வநாத்தும் பேசிக் கொள்வது மாதவியை குழப்பியது.

“இவர்கள் என்ன பேசுகிறார்கள்.... இப்போது என்ன சிக்கல்? அண்ணன் எதற்காக ஊரை விட்டு போகச் சொல்கிறான்?” மண்டையை உடைத்துக் கொண்டாள் மாதவி. ஒரு எல்லைக்கு மேல் அவளால் பொறுக்க முடியவில்லை. கதவைத் திறந்து கொண்டு உள் நுழைந்தாள். அவர்களும் பேச்சை உடனேயே நிறுத்தினர். அவள் அவர்களை கலக்கமுடன் பார்த்தாள்.

“என்ன மாதவி?”

“நீங்க பேசினது காதுல விழுந்தது. என்ன பிரச்சினை?”

- அவள் நேரடியாக விஷயத்தை தொடவும் அவர்களும் விதிர்த்தனர். மௌனம் சாதித்தனர்.

“உங்களத்தான் என்ன பிரச்சனை?” - அதட்டலான குரலில் கேட்டாள்.

“எப்படி மாதவி சொல்வேன் - நீ தாங்க மாட்டே...”

“தப்பா சொல்றேண்ணே... நான் தாங்க முடியாதுங்கற பல விஷயங்களை தாங்கிட்டேன். இனி நான்



தாங்க முடியாத ஒண்ணு இருக்கற மாதிரியே எனக்கு தெரியில....”

“இருக்கலாம். ஆனாலும் எதுவா இருந்தாலும் நாங்க சமாளிச்சுக்கிறோம். நீ போய் வேலையை பார்.”

“அப்படி எல்லாம் நீங்க சொன்ன உடனே போயிட என்னால முடியாது. என்ன பிரச்சனை?”

- திரும்பவும் குரலில் அழுத்தம் கொடுத்துக் கேட்டாள். வேறு வழியில்லாமல் ராம்குமாரும் நடந்து முடிந்த அவ்வளவையும் சொல்லி முடித்தான். அதே வேளையில் நான் தாங்குவேன் என்றவளிடம் பேச்சு மூச்சில்லை.

“நான் சொன்னேன் - நீ கேக்கல. இப்ப பார் உன்னால என்ன பேசறதுன்னே தெரியல....”

“என்ன பேசறதுன்னு தெரியாம இல்லை. எப்படி பேசறதுன்னு தெரியாம தான் இருந்தேன். நல்லவேளை இப்ப பேச நேரம் வந்திருக்கு...”

“நீ என்ன சொல்றே?”

“நான் சொல்றது இருக்கட்டும். உங்க முடிவு என்ன?”

“நீங்க இரண்டு பேரும் மகேந்திரனோட வெளி நாட்டுக்கு போயிடுங்க. அந்த பிளாக் மெயிலரை நான் சமாளிச்சுக்கறேறன்.”

“எப்படி?”

“அது எப்படியோ?”

"ஆக தொடர்ந்து தப்பு செய்யறது தான் உன் முடிவு அதை திருத்திக்கறது கிடையாது - அப்படி தானே?"

"நீ என்ன சொல்றே?"

"நான் இப்ப சொல்றத நல்லா கேட்டுக் கோண்ணே. மகேந்திரன் என்னை அம்மான்னு கூப்பிடும் போதும், துருதுருன்னு விளையாடும் போதும் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும். அப்படியே அந்த சந்தோஷம் கேள்வியா மாறி நீ ஒரு உண்மையான தயான்னு கேட்டு என் மனசைக் குத்தும்...."

"மாதவி என்ன சொல்றே நீ?"

"உள்ளதைச் சொல்றேன். எனக்கே இவன் மேல் இவ்வளவு பாசம் இருக்கும் போது இவனை பெத்து ஒரு வருஷம் வரை வளர்த்துட்டு பறி கொடுத்துட்ட அந்த உண்மையான தாய்க்கு மனசு எப்படி துடிக் கும்னு நான் யோசிச்சுப் பார்ப்போம்..."

"மாதவி நீ இப்ப என்ன சொல்லவரே?"

"இப்படி யாரோ ஒருத்தன் பிளாக்மெயில் பண்ணி அவனுக்கு பணத்தை தந்து மகேந்திரனை நாம வளர்க்கறதை விட, அந்த தம்பதிகளை நேர்ல பார்த்து மகேந்திரனை ஒப்படைச்சு மன்னிப்பு கேட்போம் அண்ணே.. தப்புக்கு தப்பா பண்ணிகிட்டு போறது கொஞ்சமும் சரி இல்லை."

"இதோ பார்.. இதோட பின் விளைவுகளை நீ கொஞ்சமாவது யோசிச்சு பார்த்தியா?"



"என்ன பின் விளைவு? மாமா அதிர்ச்சி அடைவார். சொத்து கைவிட்டுப் போகும்... இதெல் லாம் தானே?"

"பைத்தியம்... இந்த விஷயத்துல எங்களை அரெஸ்ட் பண்ணி உள்ள வைக்கவே முடியும். நாம பண்ணியிருக்கறது அவ்வளவு பெரிய தப்பு."

"இல்ல... நாம மன்னிப்பு கேட்டுட்டா நிச்சயம் நமக்கு நீங்க நினைக்கற மாதிரி எல்லாம் நடக்காது. எனக்கு நம்பிக்கை இருக்கு."

"அது சரி மகேந்திரனைப் பிரிஞ்சு உன்னால இருக்க முடியுமா?"

"இப்படி எவனோ ஒருத்தன் பிளாக்மெயில் பண்ணுவான் அவனால எப்ப பிரச்சினை எப்படி வெடிக்குமோன்னு பயந்துகிட்டே இருக்கறதுக்கு நம்ம பிள்ளை இதே ஊர்ல அவன் உண்மையான அம்மா அப்பா கிட்ட வளர்றாங்கறது நல்ல விஷயம் தானேங்க..."

- மாதவியின் கேள்வி நியாயம் விஷ்வநாத்தை கட்டிப் போட்டுவிட்டது. ராம்குமாரோ என்ன பதில் சொல்வது என்று தெரியாதவனாக தாடையை வருடினான்.

"என்ன யோசனை... முதல்ல மகேந்திரனை பற்றின உண்மைகளை நாம மாமாகிட்ட சொல் வோம். அது ரொம்ப முக்கியம். அவர் எவ்வளவு வருத்தத்துல இருக்கார் தெரியுமா?"

"அவருக்கென்ன வருத்தம்?"

"என்ன வருத்தமா? இப்ப கூட உங்களுக்கு விருது கிடைச்ச விஷயத்தை நீங்க நேர்ல சொல்ல லைன்னு ரொம்ப வருத்தப்பட்டார். வயசாயிடிச்சு மூலைல கிடன்னு சொல்லாம சொல்றீங்களான்னு கேட்டார்."

"மண்ணாக்கட்டி, இவராலதானே இவ்வளவு சிக்கலும் நம்ம காதலை தொடக்கத்துல ஒத்து கிட்டிருந்தா இந்த சிக்கலே இல்லையே."

"பழைய குப்பையை கிளற வேண்டாம். ஒரு குற்றத்தோட நிம்மதியா யாரலையும் வாழ முடியாது. அந்த பிளாக் மெயிலர் அடுத்து போன் பண்றதுக்கு முந்தி நாம செய்ய வேண்டியதை செய்து முடிப் போம். இதுதான் நாம செய்த தப்புக்கு நாம செய்ய வேண்டிய பரிகாரம்."

- மாதவியா பேசுகிறாள் என்று ஆச்சரியமாக இருந்தது ராம்குமாரருக்கு... ஆனால் விஷ்வநாத்தால் அவள் சொன்னதை ஜீரணிக்க முடியவில்லை.

"மாதவி... என்னால நீ சொன்ன எதையும் ஏற்க முடியாது. நீ இப்படி பேசுவேன்னும் நான் எதிர்ப் பார்க்கலை. உன் பதில், எனக்கு உள்ள படியே ரொம்ப ஆச்சரியத்தை தான் தருது."

"நானும் ஒண்ணும் சுயநலமில்லாதவ இல்லைங்க. இந்த எண்ணம் எனக்கு வந்து பல காலம் ஆச்சு. ஆனா இப்ப பிரச்சினைன்னு வரவும்தான் நான் தவறை திருத்திக்க முன் வரேன். என்னை பார்த்து ஆச்சரியமெல்லாம் படாதீங்க."

- மாதவிமிகத் தெளிவாக பேசினாள்.



"சரி எனக்கு கொஞ்சம் அவகாசம் கொடு.... என்றபடியே விலகிப்போனான். ராம்குமார் மட்டும் மாதவி அருகில் வந்து அவள் கையை பிடித்துக் கொண்டு "மாதவி நீ இப்படி ஒரு நல்ல முடிவைச் சொல்வேன்னு நான் கொஞ்சம் கூட எதிர் பார்க் கலை" என்றான்.

"என்னை பாராட்றது அப்புறம். அந்த பிளாக் மெயிலர் அடுத்து போன் பண்றதுக்கு முந்தி நாம இதை செய்தாகணும் அதை மறந்துடாதீங்க. நல்லதை மட்டும் உடனே செய்துடணும். தள்ளிப் போட்டா செய்ய முடியாது."

"சரி... உன்னால மகேந்திரனைப் பிரிஞ்சு இருக்க முடியுமா?"

"இருப்பேண்ணே... ரொம்ப மனசு கிடந்து அலைபாயும் போது தூர இருந்து பாத்துட்டு வந்துட வேண்டியது தான்."

- என்ற போது அவள் கண்களில் கண்ணீர்!

# 8

நம் வினைகளே நம்மை வழி நடத்துகின்றன என்று நாம் புரிந்து கொண்டு விட்டால் ஒருவர் மிகுந்த உச்சியில் இருப்பதை பார்த்து நாம் பொறாமைப் படமாட்டோம். தெரு வில் பிச்சை எடுப்பவரை பார்த்து இழிவாகவும் எண்ணமாட்டோம். அதேசமயம் நம் வாழ்வில் தவறுகள் நிகழாமல் பார்த்துக் கொள்வோம்.

நிகழ்ந்து விட்ட தவறுகளுக்கு பரிகாரத்தை தேடி அதை சரி செய்வோம். இது தான் உண்மையான பகுத்தறிவு.

நம் இறப்பிற்கு பின் நம்மோடு எதுவும் வராது. நம் வினைகளே உடன் வரும். எனவே நம் உடன் வரும் வினையானது நல்வினையாக இருக்க வேண்டியது அவசியம். அதற்கு நாம் நல்லதையே நினைக்க வேண்டும். நல்லதையே செய்யவும் வேண்டும்!

□□□

அந்த நாற்கரச் சாலை மேல் ரத்னத்தின் கார் சென்னை எல்லையை தொட்டு விட்டிருந்தது.

நல்லவேகம்!

உள்ளே எப்போதும் இல்லாத ஒரு மன நிம்மதியில் இருந்தாள் ஜானகி. அதை ரத்னமும் கவனித்தார்.

“ஜானகி”

“என்னங்க”

“சித்தர்சாமி சொன்னதை நீ நூறு பர்சண்ட் நம்பறேன்னு உன்னை பார்க்கும் போது எனக்கு தெரியுது.”

“நீங்க நம்பலையா?”

“நடக்கட்டும் - பிறகு நம்பறேன்.”

“சரி நீங்க நீங்களா இருங்க - நான் நானா இருக்கேன்”



“அதையும் பாக்கறேன். ஒரு வாரம்னு அவர் சொன்னதுல ஒரு நாள் முடிஞ்சிச்சு. இன்னும் ஆறே நாள். மணிக்கணக்குல சொன்ன 144 மணி நேரம்...”

அந்த நொடி அவர் செல்பேசியில் அழைப்பு.

“யாருங்க?”

“நீங்க ரத்னம்தானே?”

“ஆமாம் - நீங்க...”

“ரத்னா ஜூவல்லரி ரத்னம் தானே?”

“அட ஆமாங்க...”

“உங்க குழந்தை தானே நாலு வருஷத்துக்கு முந்தி தெலைஞ்சு போனது?”

“ஆமாம் - நீங்க யார் - எதுக்கு இதையெல்லாம் கேக்கறீங்க...”

“நான் யாருங்கறது இருக்கட்டும். உங்களுக்கு நான் ஒரு சந்தோஷமான செய்தி சொல்லப் போறேன். அது என்ன தெரியுமா?”

“இப்படி புதிர் போட்டா எப்படிங்க?”

“சரி நேரா விஷயத்துக்கு வந்துட்றேன். நீங்க தொலைச்ச குழந்தை இப்ப எங்க இருக்குன்னு எனக்கு தெரியும்...”

“என்னது... என் மகன் இருக்கற இடம் உங்களுக்கு தெரியுமா?”

“ஆமாம். இடத்தை தெரிஞ்சுக்க ஆசையா இருக்கா?”

"அது எதுக்கு உங்களுக்கு - உங்களுக்கு தேவை உங்க மகன்பத்தின விபரம்..."

"சரி சொல்லுங்க... எங்க இருக்கான்? எப்படி இருக்கான்?"

"ரொம்பவே நல்லா இருக்கான்... உங்க கிட்ட இருந்தா இருக்கறத விடவே இப் அவன் நல்லா இருக்கான். ஏன்னா உங்க நகை கடை மதிப்பை விட அவன் சொத்து மதிப்பு அதிகம்... அதாவது சுமாரா 500 கோடி...

"ஐயோ என்ன சொல்றீங்க நீங்க?"

"எது உண்மையோ அதை சொல்றேன்"

"அது சரி இதை சொல்ற நீங்க யாரு?"

"அது ஒரு விஷயமில்லை. உங்களுக்கு தெரிய வேண்டியது தான் விஷயம். அதுக்கு நீங்க எனக்கு ஒரு காரியம் பண்ணனும்."

"என்ன செய்யணும் சொல்லுங்க...?"

"ஒண்ணும் செய்ய வேண்டாம். ஒரு பத்து கோடிய எனக்கு நீங்க தந்தா போதும்..."

- அடுத்த நொடி ரத்னத்திடம் வாயடைப்பு ஜானகி துடிக்கத் தொடங்கினாள்.

"யாருங்க போன்ல - என்ன விஷயம். ஏதோ நம்ம மகனை பத்தின விபரம்னீங்களே... சீக்கிரம் சொல்லுங்க..."

ஜானகியின் புலம்பல் செல்போன் வழியாக அந்த பிளாக்மெயிலர் காதுகளிலும் விழுந்தது.



ரத்னம் மெல்ல பிரக்ஞை கலைந்து அவனுடன் பேச ஆரம்பித்தார்.

"ஏப்பா நீ சொல்றத நான் எதை வெச்சு நம்பறது?"

"எதுக்கு இருக்கு மரபணு பரிசோதனை - பண்ணி பார்த்துக்குங்க."

"சரி உனக்கு எப்படி தெரியும்?"

"அது இப்ப முக்கியமில்லைன்னு நினைக்கிறேன்."

"சரி இவ்வளவு வருஷமா இல்லாம இப்ப மட்டும் ஏன் சொல்றே?"

"எனக்கே இந்த உண்மை இரண்டு நாள் முந்தி தான் தெரியும்."

"சரி உண்மையை இப்படி காசு பண்ண நினைக்கறது சரியா?"

"உங்ககிட்ட நான் உபதேசம் கேட்கலை. பணம் தரத் தயார்னா பையன் எங்க இருக்கான்னு சொல்றேன். இல்லேன்னா விட்டுங்க..."

"ஏன் இப்படி ஆசை காட்டிட்டு மோசம் பண்ண பாக்கறே..."

"அநாவசிய பேச்சு வேண்டாம். பணம் தர முடியுமா?"

"சரி தரேன் - எங்க இருக்கான்னு சொல்லு"

"அது பணம் கைக்கு வந்த பின்னால சொல்றேன்"

"சரி... என்னை வந்து பார் - நான் இன்னும் ஒரு மணி நேரத்துல என் வீட்ல இருப்பேன்."

"நான் நேர்ல எல்லாம் வரமாட்டேன். என்னை நம்பி நான் சொல்ற இடத்துக்கு பணத்தோட வரணும் நீ. பணத்தை எண்ணிப் பார்த்து சரியா இருந்தா அடுத்த நிமிஷம் அட்ரஸை தந்துடு வேன்."

"அந்த அட்ரஸ்ல என் மகன் இல்லேன்னா?"

"என்னை நீ நம்பணும் - உனக்கு வேற வழி யில்ல."

"இது என்ன டீல்...? நீ யாருன்னே எனக்கு தெரியாது. ஆனா நான் உன்னை நம்பணுமா?"

"நான் தான் சொன்னேனே உனக்கு வேற வழி இல்லைன்னு..."

"சரி நம்பி பணம் தரேன்னே வை. இப்ப என் மகனை வெச்சிருக்கறவங்க என் மகனை ஒப்படைக்க சம்மதிப்பாங்களா?"

"அதெல்லாமே உன் பாடு. போலீசுக்கு போ - புகார் கொடு மரபணு சோதனை செய்யவை. உன் குழந்தையை நீ போராடித்தான் அடையணும்."

"நீ ரொம்ப சுயநல வாதிப்பா... உன் பேச்சை நம்பி நான் களத்துல இறங்கி அசிங்கப் பட தயார் இல்லை. பத்துகோடி இல்லை இருபது கோடி தரேன். என் மகனோட நீ வர்றதா இருந்தா."



"நான் என் தாய் மேல சத்யமா பொய் சொல்லல. வேணும்னா உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தரேன். உங்க மகன்னு ஊர்ஜிதம் ஆகி உங்க மகன் உங்க கிட்ட வந்து சேர்ந்த பிறகு கூட நீங்க எனக்கு பணம் தரலாம். இப்ப சரியா?"

"இது தான் பேச்சு... இது தான் டீல்..."

"அப்ப சரி அட்ரஸை நோட் பண்ணிக்குங்க..."

அவன் விஷ்வநாத் முகவரியை சொல்லி முடித்தான். ரத்னம் முகத்தில் புளகாங்கிதம். ஜானகி அந்த அட்ரஸைப் பார்த்து அழவே தொடங்கி விட்டாள்! அப்போதே டிரைவரிடம் காரை அந்த முகவரி நோக்கி தான் விடச் சொன்னார் ரத்னம்.

"என்னங்க சாமி சொன்னது பலிச்சிடும் போல இருக்குங்களே..."

"உண்மை தான் ஜானகி. அதே சமயம் நமக்கு பெரிய சவால் காத்திருக்கு. இரு ரொம்ப பெரிய இடம். அவன் சொன்னதை வெச்சு பாத்தா ரொம்ப பெரிய இடம். நான் பத்து கோடி தந்தா அவங்களால நூறு கோடி கூட தரமுடியும்."

"அதனால..."

"அதனால பையனை மீட்கறது சாதாரணமா இருக்காது."

"இல்லீங்க... சாமி சொல்லியிருக்கறதால எல்லாம் நல்லபடியாவே முடியும் நீங்க வேணா பாருங்க..."

"முடியணும். போலீசும் சட்டமும் நமக்கு துணை நிக்கணும். இல்லேன்னா நாம பொய் சொல்றதா ஆயிடும்."

"அது எப்படிங்க. இழந்த நமக்கு தானே உரிமை?"

"எல்லாம் சரி... அது நம்ம குழந்தைன்னு எதை வெச்சு சொல்றோம்னு கேட்பாங்க. ஒரு அனாமதேய போன்கால் வந்ததுன்னா சிரிப்பாங்க..."

"அதான் இந்த காலத்துல பரிசோதனை பண்ணி கண்டு பிடிக்கலாமே?"

"அதுக்கு சம்மதிக்க வைக்கவே நமக்கு சில அடிப்படையான சாட்சிகள் வேணும். புரிஞ்சுக்கோ"

"என்னங்க நீங்க... ஒரு பக்கம் சந்தோஷத்தை கொடுத்துட்டு மறுபக்கம் இப்படி அதை கலைச்சும் விட்றீங்க...."

"சரி நீ அதே சந்தோஷத்தோடயே இரு... நான் பாத்துக்கறேன்."

- ரத்னம் ஒரு தீர்மானமான முடிவுக்கு வரவும் விஷ்வநாத் பங்களாவரவும் சரியாக இருந்தது. வாசலில் செக்யூரிட்டி தடுத்தவனாக "யாரும் இப்ப வீட்ல இல்லை. வெளிய போயிருக்காங்க" என்றான்.

"எப்ப வருவாங்க?"

"தெரியாது. போன் பண்ணி இருக்கறத தெரிஞ்சுகிட்டு வாங்க" என்றான்.

ரத்னத்துக்கு சற்று ஏமாற்றமாகி விட்டது.



"எவ்வளவு நேரமானாலும் சரி நாம காத்திருப்போங்க..." என்றாள் ஜானகி. அப்படியே அந்த வாட்ச் மேனிடம்.

"ஏம்ப்பா இந்த பங்களாவுல அஞ்சு வயசுல பையன் இருக்கானா?" என்றும் கேட்டாள்.

"எங்க சின்ன முதலாளி யோட வயசு அஞ்சு தான்" என்றான் வாட்ச் மேன்.

"ஏங்க... இருக்காங்க... இருக்காங்க..." என்று கத்தினாள் ஜானகி.

"விட்டா நீ கத்தி கூப்பாடே போடுவே போல இருக்கே சரி வா. வீட்டுக்கு போய் குளிச்சு முடிச்சுட்டு வருவோம்."

"கொஞ்சம் இருந்து பாத்துட்டே போயிடலாங்க..."

"ஜானகி... இப்பதான் நாம தெளிவா, திடமா நடந்துக்கணும் சொல்றத கேள்."

- என்று அவளை இழுத்துச் சென்றார்.

காரும் புறப்பட்டது.

ஜானகி அந்த பங்களாவை திரும்பப் பார்த்தபடியே தான் விலகினாள்.

ரத்னத்தின் பங்களாவை கார் எட்டிய போது ஆச்சரியம் காத்திருந்தது. வாட்ச் மேன் கதவை திறந்து விட்டதோடு "ஐயா உங்களைப் பார்க்க தொழிலதிபர் தாமோதரனும் அவர் குடும்பத்தை சேர்ந்தவங்களும் வந்துருக்காங்க" என்றான்.

ரத்னத்துக்கு ஜிவ்வென்று எகிறியது.

அவரும் ஜானகியும் காரில் இருந்து இறங்கி ஓடினார்கள்.

உள்ளே ஹாலில் தாமோதரன், ராம்குமார், விஷ்வநாத், மாதவி - அவள் மடியில் மகேந்திரன்.

உள்ளே நுழையும் ரத்னத்தையும் ஜானகியையும் பார்த்து விட்டு அவர்கள் எழுந்து நின்றனர்.

ஜானகியும் சரி, ரத்னமும் சரி மகேந்திரனைத் தான் பார்த்தனர். அதேசமயம் ராம்குமார் வெகு வேகமாய் முன்வந்து அவர்கள் காலில் பொத்தென்று விழுந்தான்.

“எழுந்திருங்க தம்பி எழுந்திருங்க. என்ன இதெல்லாம்?”

மன்னிச்சிடுங்கய்யா... நான் பெரிய பாவி.”

“என்ன சொல்றீங்க நீங்க... நாங்க உங்க பங்களாக்கு போய்ட்டு வரோம். ஆனா நீங்க இங்க இருக்கீங்க...”

“நீங்க எங்க பங்களாக்கு போனீங்களா?”

“ஆமாம்... ஒரு அனாமதேய கால் எங்க பையன் உங்க வீட்ல இருக்கறதா வந்தது. அதான்...”

“அனாமதேய காலா... யார்கிட்ட இருந்து?”

“அனாமதேயம்னாலே யார்னே தெரியலன்னு தானே அர்த்தம்...”

“என்னன்னு போன்ல சொன்னான்?”



“நாங்க தொலைச்ச எங்க குழந்தை தான் உங்க கிட்ட இருக்கறதாவும் - போய் அதை வாங்கிக்கறது உங்க சாமர்த்தியம்னும் சொன்னான். இதுக்கு பத்து கோடி வேற கேட்டுருக்கான்...”

“அதே போன் கால் - எங்களையும் இதே மாதிரி பத்துகோடி கேட்டு ஒருத்தன் மிரட்டினான்...”

“என்னன்னு...?”

“உங்க கிட்ட உண்மையை சொல்லிடுவோம்னு...”

“அப்ப யாரோ ஒருத்தன் நம்ம இரண்டு பேர் கிட்டையுமே பணம் பிடுங்க பாத்துருக்கான்...”

“ஆமா... ஆனா நாங்க அந்த பிளாக் மெயிலுக்கு இடம் கொடுக்க விரும்பலை. பிள்ளையை உங்க கிட்ட ஒப்படைச்சு மன்னிப்பு கேட்டுக்கறத ஒரு பரிகாரமா நினைச்சுதான் வந்துருக்கோம்.”

“அப்ப பிள்ளையை நீங்க தான் திருடினீங்களா?”

“இல்லய்யா... என்ன நடந்ததுன்னு நான் சொல்றேன்”

- ராம்குமார் நடந்ததை சொல்லி முடித்தான். ஜானகி கிட்டதட்ட உறைந்து போய் மகேந்திரனையே பார்த்தபடி இருந்தாள். அவனோ ‘மம்மி மம்மி’ என்று மாதவியிடம் விளையாடிக் கொண்டிருந்தான்.

ரத்னம் மௌனமாக போய் சோபாவில் அமர்ந்தார்.

"என்னங்க... எங்க சுயநலம் உங்க வரைல முள்ளா குத்துதா... தப்புதான். நீங்க எந்த தண்டனை கொடுத்தாலும் ஒத்துக்கறோம்..." - என்று மிடறு விழுங்கினான் விஷ்வநாத்.

"ஆமாங்க... நாங்க திட்டமிட்டு திருடலை. ஆனா அன்னிக்கே ஒப்படைச்சிருக்கலாம். அதுக்கும் வழி இல்லாதபடி அந்த பிச்சைக்காரன் செத்துட் டான். அதான்..." - ராம்குமார் மென்று துப்பி னான்.

தாமோதர் மட்டும் அமைதியாகவே இருந்தார். அவரிடம் ஏதோ ஒரு தீர்மானமான முடிவு. ரத்னம் அதை உணர்ந்தவர் போல பேசினார்.

"ஐயா ரொம்ப பெரியவங்க... ஏதோ நினைக்கற மாதிரி தெரியுதே"

"ஆமாம்... இந்த சிக்கலுக்கு என் அந்தஸ்த்து காச்சலும் பண வெறியும் கூட ஒரு காரணம். ஆனா இப்ப அதை பத்தி பேசறது அர்த்தமில்லை.

இதோ உங்க பையன் மேல தான் இப்ப என் சொத்தே இருக்கு. அதை நான் திருப்பி எடுத்துக்க போறதில்ல. இது நான் கொடுக்கற அபராத தொகைன்னு நினைச்சுக்குங்க. போலீஸ் கோர்ட் டுன்னு போகாம நமக்குள்ள நாம சமரசமா போயிடு வோம்" என்றார்.

ரத்னமும் அதைகேட்டு சிலிர்த்தவராக "ஐயா... நான் இப்ப வெள்ளியங்கிரி மலைக்கு போய் யோகி பகவதி சித்தரோட பூஜைல கலந்துகிட்டு அவர் அருள்வாக்கை வாங்கிகிட்டு வந்துருக்கேன்.



அவர் என்னை கட்டிப் போட்டுத்தான் அனுப்பி இருக்கார். பெருந்தன்மையாவும் குறுக்கு வழில போகாமலும் இருக்க சொன்னார். அப்ப எனக்கு புரியல. இப்ப புரியுது...

இது என் வரைல நம்ப முடியாத அதிசயம். எங்க மகனுக்காக நான் ரொம்ப போராட வேண்டியிருக்கும்னு நினைச்சேன். ஆனா நீங்களே கௌரவம் பார்க்காம, பண பலத்தை காட்டாம சித்தர் சொன்னபடி நடந்துகிட்டு என்னை ரொம் பவே கட்டி போட்டுட்டீங்க..."

பிள்ளை பாசம் இப்படி நடந்துக்க வெச்சிடிச்சு. "உங்கள 4 வருஷமா ரொம்ப தண்டிச்சுட்டோம் மன்னிச்சுடுங்க..." என்று திரும்ப கூறினான் விஷ்வ நாத். அப்படியே மகேந்திரனை சுமந்து சென்று ஜானகியிடம் ஒப்படைத்தான்.

ஆனால் அவன் மாதவியிடம் ஓடிவந்து அவளை கட்டிக்கொண்டான்.

விஷ்வநாத் பல்லைக் கடித்துக் கொண்டு அவனை வலிந்து பிடுங்கி ஜானகியிடம் கொடுத்தவன் "அம்மா இவனை விட்றாதீங்க. நாங்க போன பிறகு கொஞ்சம் அழுவான். அப்புறம் சரியா போயிடும் சரியா போயாகணும்... வேற வழியில்லை' என்றவன் "புறப்படுங்க..." என்று கண்ணீர் பீறிடும் மாதவி யோடு மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு வேகமாய் வெளியேறினான்.

"மம்மி... டாடி... மம்மி... டாடி..."

- என்று மகேந்திரன் போட்ட சப்தத்தில் அந்த பங்களாவே நடுங்கியது!

□□□

மறுநாள்!

ராம்குமாருக்கு அந்த பிளாக் மெயிலரிடம் இருந்து போன் வந்தது.

"எனக்கு பயந்துகிட்டு கடைசில சரண்டர் ஆயிட்டீங்க போல் இருக்கு..."

"ஆமாம். இனி போன் பண்ணாதே. நீயார்ன்னு தெரிஞ்சா உன்னை கொல்லக் கூட தயங்க மாட்டேன்"

"நீ இப்படி ஒரு முடிவுக்கு வருவேன்னு தான் நான் அந்த பக்கமா அவர் கிட்ட பத்து கோடிய கேட்டேன் ஆனா அந்த ஆளும் நாமத்த போட்டுட்டான். ஒண்ணு மட்டும் புரியது... இரண்டும் பெரிய பணக்காரர்களுக்கு நடுவுல என்ன மாதிரி ஆளுங்க ஜெயிக்க முடியாதுன்னு..."

"தெரியுதுல்ல... போனை வை!" என்றான் கடுமையான குரலில். அப்படியே மாதவியை பார்க்க சென்றான்.

அவள் படுக்கையில் கிடந்தாள்.

மகேந்திரனை பிரிந்ததில் அவளிடமும் பாதிப்பு.

லேசான நெஞ்சுவலி. ராம்குமார் அருகில் வந்தான். அமர்ந்தான்.



"யார் அண்ணா போன்ல?"

"வேற யார் அந்த பிளாக்மெயிலர் தான்."

"இன்னுமா பண்றான்."

"இனி பண்ண மாட்டான். அவனுக்கே தெரிஞ்சு போச்சு நாம இப்படி சமரசமா போவோம்னு அவன் எதிர்பார்க்கல."

"அவன் யார்னு கண்டுபிடிச்சு போலீஸ்ல புகார் கொடுக்க முடியலையாண்ணே...?"

"முடிஞ்சிருந்தா தான் எப்பவோ செய்திருப் பேனே... அதேசமயம் இதுல என் தப்பும் இருக் கும்மா..."

"உன் தப்பா?"

"ஆமா... நான் பாருக்கு போய் குடிக்காம இருந்திருந்தா இந்த பிளாக் மெயிலர் முளைச் சிருக்கவே மாட்டான். அங்க நான் குடிபோதைல உளறினதாலதான் இத்தனை சிக்கலும்..."

"நீ என்னண்ணே சொல்றே?"

"நான் குடிச்சு மட்டையாகி விழவும் என்னை கூட்டிகிட்டு வந்தான் பார் ஒருத்தன்... அவன் தான் இந்த பிளாக் மெயிலர்...!"

அதைக் கேட்ட மாதவி அப்படியே விக்கித் தாள்.

"என்னம்மா அப்படியே வாயைப் பொளந் துட்டே?"

“உன்னை கூட்டிகிட்டு வந்தது என் மாமனார் அண்ணே!”

- மாதவியின் பதில் அடுத்த சவுக்கை சொடுக்கியது. ராம்குமாரும் அப்படியே விக்கித்து விட்டான்.

“அவரா...?”

“அவரே தான்.”

“அப்ப இதெல்லாம் அவர் போட்ட நாடகமா?”

“அப்படித்தானே நினைக்க வேண்டியிருக்கு...”

- அவள் அழுத்திச் சொல்ல தாமோதரும் காத்திருந்த மாதிரி வந்தார்.

ராம்குமார் அவன் முன் மிரண்டு போய் எழுந்து நின்றான்.

“என்ன ராம்குமார் ஜீரணிக்க முடியலியா நான் தான் அந்த பிளாக் மெயிலர்ங்கறத...?”

“அ... ஆமாம் அங்கிள்...

“என்னை கட்டிப்போட நீ செய்த செயல் என்னை ரொம்ப யோசிக்க வெச்சது. உன் வாயால உண்மை தெரியவும் நான் நொறுங்கிட்டேன். செஸ் விளையாட்டு மாதிரி பார்த்து கவனமா பிளாக் மெயில் பண்ணி இரண்டு பக்கமும் ஒண்ணாக வெச்சேன். என் சார்புல ஒருத்தனை நான் தான் போன் பண்ண வெச்சேன். நீங்க தொடர்ந்து தப்பு பண்ணி என்னை ஏமாத்த போறீங்களா இல்லை என்னை செய்யப் போறீங்கன்னும் கவனிச்சேன். அந்த



பக்கம் ரத்னத்தோட பாசத்தையும் தட்டி விட்டேன். நான் எதிர்பார்த்ததும் நடந்து முடிஞ்சிடிச்சு.

நான் எதிர்பார்த்ததும் நடந்து முடிஞ்சிடிச்சு.

கௌரவ சேதம் இல்லாம என் மகனையும் காப்பாத்திட்டேன். ஆனா பாசச் சேதாரம் ரொம்ப அதிகம். மகேந்திரன் இல்லாத வேதனையை சுமக்கறது தான் கஷ்டமா இருக்கு...”

- என்று அவர் கூறி முடிக்கவும் கண்ணீர் பொலபொலவென்று உதிர்ந்தது. ஆனால் சில மணி நேரங்களிலேயே ‘மம்மி டாடி’ என்ற மகேந்திரன் குரல் அந்த வீட்டில் ஒலித்தது. அனைவரும் ஹாலுக்கு வந்த போது ரத்னம் மகேந்திரனுடன் வந்திருந்தார்! மகேந்திரன் ஓடி வந்து மாதவியை கட்டிக் கொண்டான்.

“வாங்க ரத்னம் உக்காருங்க...”

“இருக்கட்டும் சார்... மகேந்திரனை உங்ககிட்ட ஒப்படைக்கதான் வந்தேன். நான் கிளம்பறேன்...” - என்று ரத்னம் இன்ப அதிர்ச்சியை வெகுவேகமாய் அளித்தார்.

“என்ன ரத்னம் சொல்றீங்க... அவன் உங்க மகன்”

“பெத்தது மட்டும் தான் நான்... ஆனா வளர்த்த பாசம் தான் அவன் கிட்ட இருக்கு. இந்த 2 நாள்ள பச்சை தண்ணி கூட குடிக்கலை அவன்!

அதே சமயம் என் ஜானகி மயக்கமாகவும் டாக்டர் வந்து பரிசோதிச்சார். அவ இப்ப கர்ப்பிணி!

எனக்கு அதை கேட்டு கனவு மாதிரி இருந்தது. எங்க குறையை கடவுள் தீர்த்துட்டான்னு தெரிஞ்ச நொடியே உங்க குறைதான் ஞாபகத்துல வந்தது. அதான் கூட்டிகிட்டு வந்துட்டேன்” என்றார் ரத்னம்.

பதிலுக்கு மாதவி ஆனந்த கண்ணீரோடு அவர் காலில் சரிந்து விழுந்தாள். விஷ்வநாத் ரத்னத்தின் கையை கண்களில் ஒற்றிக் கொண்டான்.

ராம்குமார் அவரை கட்டிக் கொண்டான். தாமோதரன் அருகில் வந்து “நீங்க தங்க வியாபாரி மட்டுமில்ல தங்கமான வியாபாரியும் கூட” என்றார்.

ஆமோதிப்பது போல அந்த ஹாலின் கெடிகார பெண்டுலம் ஒலிக்க ஆரம்பித்தது. ஒருமுறை இரு முறை அல்ல பன்னிரெண்டு முறை!

முற்றும்